DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East (2nd flr) Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

உதயம் 1553 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 9, 2026

# யாழ்ப்பாண மாவட்டம் இதுவரை எதிர்கொள்ளாத மழை வீழ்ச்சி பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது என்கிறார் விரிவுரையாளர் பிரதீபராஜா!



தற்போது உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் யாழில் 650 மில்லிமீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் உள்ளதாக யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இதன் தாக்கம் காரணமாக யாழ். மாவட்டம் இதுவரை எதிர்கொள்ளாத அளவு பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் 7ம் திகதி புதன்கிழமை அன்று (07.01.2026) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

(தொடர்ச்சி 17ம் பக்கம்)

## வாசகப் பெருமக்கள், விளம்பரதாரர்கள், வர்த்தகப் பெருமக்கள், கட்டுரையாளர்கள், செய்தியாளர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் கனடா உதயன் ஆசிரிய பீடத்தின் தித்திக்கும் தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்!



# வைத்திய கலாநிதி செந்தில் எஸ் மோகனின் நிர்வாகத்தில் இயங்கும் MEDICENTRE HEALTH வைத்திய நிலையம் Hilton Toronto / Markham Suites இல் தனது வருடாந்த விருது வழங்கும் விழாவை அழகுற நடத்தியது!



ஸ்காபுறோ நகரில் வைத்திய கலாநிதி செந்தில் எஸ் மோகன் அவர்களது நிர்வாகத்தில் இயங்கும் **'MEDICENTRE HEALTH'** வைத்திய நிலையம் ஐந்து நட்சத்திர ஹோட்டலான **Hilton Tornto / Markham Suites.** இல் நட த்திய தனது வருடாந்த விருது வழங்கும் விழாவை அழகுற ஏற்பாடு செய்திருந்தது.

அது மாத்திரமல்ல வைத்திய கலாநிதிகளான முக்கிய சிறப்பு விருந்தினர்களையும் அமெரிக்காவிலிருந்து அழைத்து கௌரவித்தது.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

GL PRIME LEGAL SERVICES
இலவச சட்ட ஆலோசனை 905 334 6851
Immigration Law Family Law Criminal Law
• PR APPLY • SPONSORSHIPS • WORK PERMIT
• SUPER VISA All Other Legal Services
www.glprimelegal.ca ERAA PLAZA Unit #231


இனிய தைப் பொங்கல்
நல்வாழ்த்துக்கள்!
Happy Thai Pongal
நன்றிக்கு தமிழினம் நாள் குறித்து கொண்டாடும் நன்நாளாம்
தைத்திருநாள், தைப்பொங்கல். மரபுத்திங்கள் என மகுடம்
சூடிதமிழர் மான்புடன் கொண்டாடும் மாதம் இத் தைமாதம்.
நானிலம் சிறந்து நற்பேறுடன் அனைவரும் வாழ வாழ்த்துகிறேன்.
JUANITA
NATHAN
Member of Parliament
Pickering - Brooklin
juanita.nathan@parl.gc.ca
juanita.nathan
juanita nathan

Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

தமிழில் உரையாடி உங்கள் நெருக்கடியான நேரத்தில்
எமது சேவைகளை பூரண திருப்தியுடன் பெற்றுக்கொள்ளுங்கள்

SMART RESTORATION
We work with your insurance company

ARUN ANANTH
24/7 EMERGENCY SERVICES
647-849-4444 ( Cell )
1-833-SMART 09 ( Office )
(76278)
info.smartrestoration@gmail.com
smart-restoration.net

SERVICES
• Water and flood services • Mold remediation • Trauma
• Sewage clean up • Fire & smoke • 24/7/365 days
LISENSED
INSURED
CERTIFIED

உதயன் கதிரோட்டம்

# இலங்கையின் அநுர அரசு சிறுகச் சிறுக சேகரித்து வைத்த திறைசேரியை குறி வைத்த "தித்வா" புயலும் வெள்ளப் பெருக்கும்!

தித்வா புயலின் விளைவான வெள்ளமும் மண்சரிவும் கடந்த நவம்பர் மாத இறுதிப்பகுதியில் இலங்கையின் அனைத்து துறைகளிலும் பேரழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. மழையுடன் சேர்த்து நாட்டின் பல பகுதிகளில் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளை ஏற்படுத்திய இப்புயல் வடக்கு, கிழக்கு, வடமேல் மாகாணங்கள் உட்பட ஏனைய பிரதேசங்களிலும் கடுமையான வெள்ள நிலை உருவாகியிருந்ததோடு மத்திய மலைநாட்டுப் பகுதிகளில் குறிப்பாக தேயிலை பயிரிடும் பிரதேசங்களில் பாரிய மண்சரிவுகள் ஏற்பட வித்திட்டது. அதன் விளைவாக இந்த இயற்கை அனர்த்தங்கள் 16 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தியை அச்சுறுத்தல் நிலைக்கு தள்ளியுள்ளதென கணிப்பிடப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 16 பில்லியன் டொலர்களாகிறது என்ற செய்தி இலங்கை அரசாங்கத்தினால் வெளிநாட்டு தூதரங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவ்வனர்த்தங்களால் ஏற்பட்டுள்ள அழிவு, சேதங்கள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கைகள் கடந்த சில தினங்களாக வெளியிடப்பட்டு வருகின்றன. அந்த வகையில் உலக வங்கியின் பூர்வாங்க மதிப்பீட்டு அறிக்கை இவ்வாரத்தின் ஆரம்பப்பகுதியில் வெளியானது. அந்த அறிக்கையின்படி, இந்த வெள்ளம், மண்சரிவுகளால் வீதிகள், பாலங்கள், மின்சாரக் கட்டமைப்புக்கள், தொலைத்தொடர்பு கட்டமைப்புக்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதாரத் துறைகளில் நாடு எதிர்கொண்டுள்ள பௌதீக ரீதியிலான நேரடிப் பாதிப்புக்களின் பெறுமதி 4.1 பில்லியன் டொலராகும். இது உள்நாட்டு மொத்த தேசிய உற்பத்தியில் 4 சதவீதமாகுமென தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதேநேரம் இந்த அனர்த்தங்களால் தொழிலாளர்கள் மத்தியிலும் தொழில் சந்தையிலும் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த மதிப்பீடொன்றை சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் மேற்கொண்டிருக்கிறது. அது தொடர்பான அறிக்கையை அந்த ஸ்தாபனம் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டது. அவ்வறிக்கையின் படி, இந்த அனர்த்தங்களால் நாட்டில் 3 இலட்சத்து 74 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 2 இலட்சத்து 44 ஆயிரம் ஆண்களும் 1 இலட்சத்து 30 ஆயிரம் பெண்களும் அடங்கியுள்ளனர். இவர்களை துறைவாரியாக நோக்கும் போது விவசாயத்துறையில் 85 ஆயிரம் பேரும், கைத்தொழில் துறையில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேரும், சேவைகள் துறையில் 1 இலட்சத்து 64 ஆயிரம் பேரும் என்றபடி பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் முகம் கொடுத்திருக்கும் மாதாந்த வருமான இழப்பின் பெறுமதி 48 பில்லியன் டொலர்கள் என்று சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தத் தரவுகளின் படி, இந்த இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டிருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அவர்களது மாதாந்த இழப்பும் சாதாரணமாக கடந்து செல்லக்கூடிய விடயமல்ல. 600 இற்கும் மேற்பட்டவர்களைக் காவு கொண்ட இந்த அனர்த்தங்கள், 22 இலட்சம் பேர் பாதிக்கப்படவும் 2 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்கவும் காரணமாக அமைந்தது. பாதிக்கப்பட்டவர்களில் 3 இலட்சத்து 74 ஆயிரம் தொழிலாளர்கள் அடங்கியுள்ளனர்.

இந்த தொழில் முயற்சியாண்மையாளர்களது தொழில் தளங்கள் மாத்திரமல்லாமல் அத்தொழில்களை முன்னெடுப்பதற்கு அவசியமான இயந்திர உபகரண வசதிகளும் பெரிதும் சேதமடைந்தும் பாதிக்கப்பட்டும் காணப்படுகின்றன. அதனால் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள தொழில்துறைகளை நன்கு திட்டமிட்ட அடிப்படையில் மீளக்கட்டியெழுப்ப நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அதனால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்வாதாரங்களில் ஏற்படும் சாத்தியமான விளைவுகளை விரைவான முறையில் மதிப்பிட உதவும் வகையில் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் தயாரித்துள்ள இவ்வறிக்கை, அவசர நடவடிக்கைகள் மற்றும் இடைப்பட்ட கால முயற்சிகளை வழிநடாத்தவும் பயன்படுத்தக்கூடியதாக அமையும். குறுகிய காலத்தில் அவசர பொருளாதார உதவிகள் மற்றும் கண்ணியமான தொழில் நிலைகளை உறுதி செய்யும் தொழிலாளர் அடிப்படையிலான மீட்பு வேலைத்திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் நடைமுறைப்படுத்தல் இன்றியமையாதது. அத்தோடு சிறு, மற்றும் நடுத்தர துறைசார் நிறுவனங்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டிய நிலையும் காணப்படுகிறது.

இவ்வாறான சூழலில் தித்வா புயலின் விளைவான அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டையும் மக்களையும் தொழில்துறைகளையும் மீளக்கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஏற்கனவே அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறான திட்டங்களில் ஒன்றான "வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் ஒவ்வொருவரும் சிறிய தொகைப் பணத்தை அமெரிக்க டாலராகவோ, கனடிய டாலராகவோ அன்றி பிரித்தானியாவின் பவுண்ஸ் ஆகவோ அல்லது அவுஸ்ரேலியாவின் டாலராகவோ இலங்கையின் மத்திய வங்கிக் கணக்கு ஒன்றுக்கு அனுப்பி வைக்கும் வண்ணம் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களின் உயர் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்த வண்ணம் உள்ளார்கள். இதே வேளை வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் தாங்களாகவே முன்வந்து செய்து வரும் நிவாரணப் பணிகள் தொடர்பாக நாம் அறிந்து அகமகிழ்ந்துள்ளோம். குறிப்பாக எமது மக்கள் மலையகப் பகுதிகளுக்கு நான்கு திசைகளிலிருந்தும் ஆனப்ப வருகின்றார்கள். அதேபோன்று இலங்கை அரசினது வேண்டுகோளையும் ஏற்று தங்கள் தயாள சிந்தையை வெளிக்காட்ட வேண்டும் என்ற கோரிக்கையையும் இவ்வார பதிவின் மூலம் வேண்டிக் கொள்கின்றோம்.!

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்
சிறப்பு பூசைகளும், புதுவருட, பொங்கல் வாழ்த்துக்களும்
மார்க்கம் வீதி ஸ்காபரோவில் அமைந்திருக்கும்
மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்
14-01-2026 புதன்கிழமை காலை 8:30 மணி முதல் பொங்கல் சிறப்பு பூசைகள்,
18-01-2026 தை அமாவாசை காலை சிறப்பு வழிபாடு
1-02-2026 பூரணை தைப்பூசம் சிறப்பு பூசைகள் நடைபெற்று சிறப்பு ஆராதனைகளுடன் மகேஸ்வர பூசையும் நடைபெறும். அனைத்து சக்திகளையும் அன்னையின் அருளைப்பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.



80E நாஸ்டீன் வீதி ஸ்காபரோ
தொடர்புகளுக்கு: 647-436 9647

## முதியவரை பராமரிக்க ஆள் தேவை

McCowan / 401 க்கு அருகில் வசிக்கும் 92 வயதான ஆண் முதியோரை பராமரிக்க முன் அனுபவம் உள்ள ஆள் தேவை.
தொடர்புகளுக்கு 647 273 2053

## House and Basement for Rent


Tapscott and McLevin
3 bedroom house for rent. 1 bedroom basement for rent.
Call Kala at 416-299-4904

## Condo Townhouse for Rent

2+1 bedrooms - New Condo Townhouse for rent.
Close to bus stop, school and shopping. Available immediately.
Call 647-201-8784

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் வட மாகாண சுற்றுலா அதிகார சபை நாட்டியுள்ள பலகையில் சைவ சமய அடையாளங்கள் காணப்படுவதனால் மன்னார் குருமுதல்வர் ஆட்சேபம்!




- ந.லோகதயாளன்

மன்னாரில் வட மாகாண சுற்றுலா அதிகார சபை நிறுவியுள்ள வழிகாட்டல் பலகையில் சைவ சமய அடையாளங்கள் காணப்படுவதனால் அதனை அகற்றுமாறு மன்னார் குருமுதல்வர் எழுத்தில் கடிதம் அனுப்பி வைத்துள்ளார். வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் மாவட்ட ரீதியில் மாவட்டத்தின் முக்கிய இடங்களில் அடையாள விளம்பர பலகைகளை மாகாண சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை நாட்டி வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரின் நுழைவாயில் அருகே உள்ள மதகுப் பகுதியில் தலைமன்னார் இராமேஸ்வரம் இடையே காணப்படும் இராமர் பாலம் தொடர்பிலான அறிவித்தல் பலகையும் கடந்த வாரம் நாட்டப்பட்டது. இவ்வாறு நாட்டப்பட்ட அறிவித்தல்ப் பலகையில் இராமர், இலட்சுமணன் ஆகியோருடன் ஆஞ்சநேயர் போன்ற சமய கடவுள்களின் படங்களும் பிரதி பலிக்கின்றது. சைவ சமயத்தை மையமாக கொண்டதாக காணப்படுவதனால் அந்த அறிவித்தல்ப் பலகையை அகற்றுமாறு மன்னார் ஆயர் இல்லம் அழுத்தம் கொடுத்து வருகின்றது.

அழுத்தம் பிரயோகிக்கப்பட்டபோதும் அறிவித்தல்ப் பலகை அகற்றப்படாத காரணத்தால் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தின் கடித தலைப்பில் மன்னார் நகரசபையின் தவிசாளருக்கு முகவரியிடப்பட்டு மறைக்கோட்ட முதல்வர் து.கிருஸ்துநாயகம் கடிதம் அனுப்பி வைத்துள்ளார். வடக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக முன்னர் பதவி வகித்த அ.பத்திநாதன் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதும் சில நாட்களுக்கு முன்னர் பதவி நீக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 5 தசாப்தங்களின் பின் அபிவிருத்தி காணும் அல்லைப்பிட்டி அலுமினியம் தொழிற்சாலை வீதி திட்டத்தை ஆரம்பித்து வைத்தார் ரஜீவன் எம்.பி



ஜனாதிபதி “அனுர” தலைமையிலான அரசின் 1000 கிராகிய வீதிகள் அபிவிருத்தி திட்டத்தின் ஒரு கட்டமாக 3ம் திகதி சனிக்கிழமை அன்று யாழ்ப்பாணம் வேலணை பிரதேசத்தின் அல்லைபிப்பிட்டி, அலுமினியம் தொழிற்சாலை வீதியை, காப்பெற் வீதியாக அபிவிருத்தி செய்வதற்கான பணிகள் அன்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவனால் ஆரம்பித்து வைக்கப்பெற்றது.

மக்களின் அவசிய தேவை கருதி தேசிய மக்கள் சக்தியின் வேலணை பிரதேச சபை உறுப்பினரான ஆனந்தராசா சதீஸ்குமாரின் திட்ட முன்மொழிவுடன், தெரிவு செய்யப்பட்ட குறித்த வீதியின் அபிவிருத்திக்கான ஆரம்ப பணிகளை நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் ஆரம்பித்து வைத்தார்.



குறித்த 1000 கிராகிய வீதிகள் அபிவிருத்தி திட்டத்தின் முதற் கட்டமாக வடக்கில் 25 வீதிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், வேலணை பிரதேசத்தில் 30.7 மில்லியன் நிதிச் செலவில் 1.3 கிலோ மீற்றர் தூரம் கொண்ட குறித்த வீதியானது “காப்பெற்” மற்றும் கொங்கிறீற் ஆகிய இரு வகைகளிலும் குறித்த பகுதியின் நீரோட்டத்துக்கு இயைவாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

இன்னிலையில் அலுமினியம் தொழிற்சாலை வீதி, 50 வருடங்களின் பின், குறிப்பாக வீதி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து நிரந்தர அபிவுருத்தியை காணாதிருந்த குறித்த வீதி இன்று அதன் எதிர்பார்ப்பை எட்டியுள்ளதாக அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இதனிடையே குறித்த பகுதியில் இருக்கும் மற்றொரு அவசிய வீதியான மண்டைதீவு இணைப்பு வீதியையும் அபிவிருத்தி செய்து தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவனிடம் மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மக்களின் கோரிக்கையின் நியாயம் கருதி குறித்த வீதிக்கான அபிவிருத்தி விரைவில் முன்னெடுக்கப்படும் என்றும் அதற்கு முன்னர் அவ்வீதியின் பாலம் ஒன்று சுமார் 60 மில்லியன் நிதியில் கட்டமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன், குறித்த பாலம் நிறைவுற்றபின் குறுத்த வீதிக்கான நிதி பெற்றுத்தரப்படும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் ஜனாதிபதி அனுர கிராம கக்களின் நலன்களில் அதிக அக்கறை செலுத்தி வருவதால் உங்கள் எதிர்பார்ப்புக்கள் விரைவில் நிறைவேறும் என்றும் சுட்டிக்காட்டினார்.



# யாழ்ப்பாணம் உடுத்துறை கடலோரக் கிராமத்தின் கரையில் ஒதுங்கிய மர்மப் பொருள்!

யாழ். வடமராட்சி கிழக்கு - உடுத்துறை வேம்படி கடற்கரை பகுதியில் இன்று மர்மப் பொருள் ஒன்று கரையொதுங்கியுள்ளது. கடலில் நிலவும் கடும் காற்று மற்றும் கொந்தளிப்பால் குறித்த பொருள் கரைக்கு அடித்துவரப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. மக்கள் யாரும் அருகில் செல்ல வேண்டாம் என்றும் பாதுகாப்பு தரப்பினருக்கு சம்பவம் தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

# யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கடற் பகுதியில் இறந்த நிலையில் கரையொதுங்கும் ஆமைகள்!



வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் சில நாட்களாக ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றன. அந்தவகையில் கடந்த 5ம் திகதியிலிருந்து இருநாட்கள் ஆமையின் இறந்த உடல்கள் கரையொதுங்கிய உள்ளன. கடலின் சீற்றம் காரணமாக கடல் கொந்தளிப்பாக காணப்படுவதால் காயமடைந்த ஆமைகள் உயிரிழந்து கரையொதுங்குவதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். ஆமைகளை பிடிப்பதும், இறைச்சிக்காக பயன்படுத்துவதும் சட்டவிரோதம் என்பதால் மக்கள் அவற்றை எடுக்காத படியால் கரையொதுங்கிய ஆமைகள் துர்நாற்றம் வீசக்கூடிய நிலையிலும் உருக்குலைந்தும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





# யாழ்ப்பாணம் வெண்கரம் அமைப்பின் ஏற்பாட்டில் மலையக மாணவர்களுக்கு கல்விக் கருத்தரங்கு!

யாழ்ப்பாணம் வெண்கரம் அமைப்பின் ஏற்பாட்டில் நுவரெலியா புசல்லாவை இந்து தேசிய கல்லூரி மாணவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கு, குறித்த பாடசாலையில் 6ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் நடைபெற்றது.

டித்வா புயல் காரணமாக மலையகத்தில் அதிக பாதிப்புகள் ஏற்பட்டன. அந்தவகையில் மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இன்னும் ஒரு சில மாதத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை ஆரம்பமாகவுள்ளது. அந்தவகையில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்காக இந்த கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் குறித்த மாணவர்கள் வீட்டில் இருந்து சுய கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் அவர்களுக்கு முக்கிய 5 பாடங்களை உள்ளடக்கிய கற்றல் கையேடுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கம்பளை கல்வி வலயம் பிரதிப் பணிப்பாளர் விஜயேந்திரன், வெண்கரம் அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் மு.கோமகன், வெண்கரம் அமைப்பினர், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



கனடிய செய்திகள் Canadian News

## 'MEDICENTRE HEALTH' owned and managed by Dr. Senthil S. Mohan hosted its colourful 'Awards Night' on 27-12-2026 at Hilton Toronto/Markham Suites

# வைத்திய கலாநிதி செந்தில் எஸ் மோகன் நிர்வாகத்தில் இயங்கும் 'MEDICENTRE HEALTH' வைத்திய நிலையம் Hilton Toronto/Markham Suites இல் தனது விருது விழாவை நடத்தியது




கனடா - ஸ்காபுறோ நகரில் வைத்திய கலாநிதி செந்தில் எஸ் மோகன் அவர்களது நிர்வாகத்தில் இயங்கும் 'MEDICENTRE HEALTH' வைத்திய நிலையம் ஐந்து நட்சத்திர ஹோட்டலான Hilton Toronto / Markham Suites இல் நடத்திய தனது வருடாந்த விருது வழங்கும் விழாவை அழகுற ஏற்பாடு செய்திருந்தது.

அது மாத்திரமல்ல வைத்திய கலாநிதிகளான முக்கிய சிறப்பு விருந்தினர்களையும் அமெரிக்காவிலிருந்து அழைத்து கௌரவித்தது. அத்துடன் ஒன்றாரியோ மாகாண அமைச்சர் றேமன்ட் சோ அவர்களை பிரதம விருந்தினராக அழைத்து அவரது பாராட்டுக்களையும் வாழ்த்துக்க்ளையும் பெற்று அன்றைய விழாவை வெற்றிகரமாக நடத்தியது.

மேற்படி விருது வழங்கும் விழாவில் வைத்திய சிகிச்சை நிலையத்தில் வைத்தியர்களாகவும் தாதிகளாகவும் மற்றும் பரிசோதனைகளை மேற்கொள்ளும் பயிற்றப்பெற்றவர்களாக உதவியாளர்களாகவும் அலுவலகப் பணிகளை மேற்கொள்ளும் பணியாளர்களாகவும் விளங்கும் பலர் கௌரவிக்கப்பெற்றனர்.





அவர்களுக்கு வைத்திய கலாநிதி மோகன் எஸ் செந்தில் அவர்களும் அன்றைய பிரதம விருந்தினர் அமைச்சர் றேமன்ட் சோ அவர்களும் அமெரிக்காவிலிருந்து பயணித்து சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட வைத்திய கலாநிதிகள் ஜோசப் அஞ்சலோ மற்றும் ஹர்சன் ஜெயதிலக்க ஆகியோரும் விருதுகளையும் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தனர்.

அன்றையதினம் ஊடகத்துறை சார்ந்த பல அன்பர்களையும் அழைத்து அவர்களை தகுந்த முறையில் உபசரித்து அனுப்ப வைத்திய கலாநிதி செந்தில் எஸ். மோகன் தவறவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

***தகவல்: சத்தியன்***









# Dr. புஷ்பா வன்னித்தம்பி
## பல் வைத்தியர்

## Dr. Pushpa.V & Associates
**Dentist**

**New Patients Welcome**

Open 7 Days a week

Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்
We are accepting CDCP insurance.

**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
**416-289-7187**

**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
**905-201-8900**



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தொல்லியல் திணைக்களத்துடனான இழுபறியால் கவனிப்பாரற்றிருந்த நிலாவரைக் கிணற்றுப் பகுதி வலிகாமம் கிழக்கு பிரதேச சபையால் துப்பரவு செய்யப்பெற்றது

நிலாவரை ஆழமற்ற கிணற்றுப் பகுதி மிகவும் தூய்மையற்றதாகக் காணப்படுவதாக சமூக வலைத்தளம், ஊடகங்களில் வெளியாகிய விமர்சனத்தினைத் தொடர்ந்து வலிகாமம் கிழக்கு பிரதேச சபையால் விரைவாக துய்மிப்புப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

காலாகாலமாக பிரதேச சபையினால் நிலாவரை ஆழமற்ற கிணறு உள்ளிட்ட பகுதிகள் சபையின் சொத்தாக பராமரிக்கப்பட்டன. பிரதேச சபையின் நேரடி முகாமைத்துவத்தின் சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் எல்லை மதில்கள் அமைக்கப்பட்டு ஆழமற்ற கிணற்றினைச் சுற்றி பாதுகாப்பு, உலோக வேலிகள், பிரதேசத்தினை அழகுபடுத்தும் மின்குமிழ்கள், பார்வையாளர் இருக்கைகள், நடைபாதைகள் அமைக்கப்பட்டு திறன்பட வலயம் முகாமை செய்யப்பட்டு வந்தன. இதன் மூலம் தமிழ் மக்களின் வரலாறும் தொன்மையும் எடுத்தியம்பப்பட்டு வந்தது.

2021 ஆம் ஆண்டுக்கும் 2023 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் மூன்று தடவைகள் ரகசியமான முறையில் இராணுவத்தினருடன் இணைந்து தொல்லியல் திணைக்களம் அத்திவாரம் வெட்டியது. அம் முயற்சி பௌத்த சிங்கள பேரினவாத நோக்கில் விகாரை அமைக்கும் முயற்சியென



குற்றஞ்சாட்டப்பட்டது. அந் நிலையில், அப்போதும் தவிசாளராக பதவி வகித்த தியாகராஜா நிரோஷ் அவற்றை தடுத்திருந்தார். இதனையடுத்து அவர் தொல்லியல் திணைக் களத்தின் அரச கருமங்களுக்கு இடையூறு விளைவித்தாகத் குற்றச்சாட்டில் தவிசாளர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு தொடர்ச்சியாக வழக்கினை எதிர்கொண்டதுடன் பிணையில் விடுவிக்கப்பட்டார். இவ் வழக்குகள் பின்னர் சட்டா அதிபரின் ஆலோசனையில் உள்ளன.



பிரதேசத்தில் உள்நுழைபவர்களுக்கான கட்டண அறவீடு தொடர்பில் தொல்லியல் திணைக்களத்தினால் தடைகளும் ஏற்படுத்தப்பட்டு வந்தன. இவ்வாறான காரணங்களினால் சபை பதவியிழந்த பின்பு பிரதேச சபையினால் குறித்த பகுதியில் செயற்பட முடியவில்லை. அதனால் அப் பிரதேசம் கழிவுகளாலும் பற்றைகளினாலும் மக்கள் முகம் சுழிக்கும் அளவுக்கு பாதிக்கப்பட்டுக் காணப்பட்டது. இதனையடுத்து சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் காட்டமான கண்டனங்கள் அண்மைய நாட்களாக வெளியிடப்பட்டன.

இதனைத் தொடர்ந்து வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், சபை உறுப்பினரும் குழுத்தலைவருமான அ.கமலறேகன், பணியாளர்கள், பிரதேச மக்கள் இணைந்து குறித்த பகுதியை 7ம் திகதி புதன்கிழமை துப்புரவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சபையின் சொத்தாக உடைவடைந்த நிலையில் உள்ள இருக்கைகள், நுழைவாயில் கதவு போன்றன திருத்தங்களுக்கு உள்ளாக் கப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டுள்ளன. பெயர்ப் பலகையிடப்பட்டுள்ளதுடன் பொலித்தீன் தடை மற்றும் சுத்தத்தினைப் பேணுவதற்கான விளம்பர பலகைகளும் பிரதேச சபையினால் வைக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



# தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய தமிழர்களின் விபரங்களை பதிவு செய்த பொலிஸார்

(08-01-2026)

தமிழர்களுக்கு சொந்தமான காணியில் அமைக்கப்பட்ட ராணுவ ஆதரவு பெற்ற தையிட்டி திஸ்ஸ விகாரை எதிரான மாதாந்த போராட்டத்திற்கு வந்த வாகனங்கள் மற்றும் வாகன உரிமையாளர்களின் விபரங்களை சேகரிக்க பொலிஸாரின் முன்னெப்போதும் எடுக்காத முயற்சி, உள்ளூர் தமிழ் ஆர்வலர்களிடையே எதிர்காலத்தில் சாத்தியமான அடக்குமுறைகள் மேற்கொள்ளப்படக்கூடிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

விகாரை அமைக்கப்பட்ட தமது காணியை மீளத் திருப்பித் தரக் கோரி போயா தினத்தன்று திஸ்ஸ ரஜமகா விகாரைக்கு வந்த வாகனங்களின் இலக்கத்தகடுகள் மற்றும் சாரதிகளின் சாரதி அனுமதிப் பத்திரங்களை பொலிஸார் பதிவு செய்ததாக தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூர் சிவகுரு ஆதீனத்தை சேர்ந்த தவத்திரு வேலன் சுவாமி புத்தாண்டின் முதல் போயா நாளில் விகாரை முன்பு நடந்த போராட்டத்தில் பங்கேற்க முச்சக்கர வண்டியில் வந்தார். அதன் இலக்கத் தகடு மற்றும் சாரதியின் சாரதி அனுமதிப் பத்திர விவரங்களை பொலிஸார் பதிவு செய்தனர்.

வேலன் சுவாமி பொலிஸாரிடம் பதிவுக்கான காரணங்கள் குறித்து கேட்டபோது, சீருடையில் இருந்த ஒரு அதிகாரி, “ஆர்ப்பாட்டம் நடக்கிறது தானே ஐயா, ஆகவே போற எல்லா வாகனத்தையும் எழுத சொல்லி சொல்லியிருக் கின்றார்கள். அவ்வளவுதான் வேறு எதுவும் இல்லை,” என பதிலளித்தார்.

நாட்டில் எந்த இடத்திற்கும் பயணிக்க மக்களுக்கு உரிமை உண்டு எனவும், பொலிஸார் இவ்வாறு தடுத்து வைத்து விசாரணை செய்வது எதற்காக எனவும் கேட்டபோது, மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே தாம் அதைச் செய்வதாக பொலிஸார் கூறியிருந்தனர். வேலன் சுவாமி, பொலிஸார் மக்களைப் பாதுகாப்பதாகக் கூறிக் கொண்டே அவர்களைத் துன்புறுத்துவதாகவும், பின்னர் சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் பொலிஸ் அதிகாரிகளிடம் கூறியிருந்தார்.

பெறப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி மக்களை வேறொரு நேரத்தில் அடக்குமுறைக்கு உள்ளாக்கும் நோக்கம் பொலிஸாருக்கு காணப்படுவதாக தான் நம்புவதாக போராட்டத்தில் கலந்து கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் தெரிவித்திருந்தார்.

“பலரிடம் தேசிய அடையாள அட்டையை விட அவர்களுடைய சாரதி அனுமதிப் பத்திரத்தை பதிவு செய்துள்ளார்கள். இதற்கு பின்னால் ஒரு உள்நோக்கம் இருக்கிறது. சாரதி அனுமதிப்பத்திரம், அதனைவிட அவர்களுடைய வாகனம். ஆகவே அவர்கள் என்னென்ன வாகனத்தை பயன்படுத்த போகிறார்களோ, அவர்களை வேறு இடங்களில் வைத்து தாக்குதல் நடத்தும் நோக்கம் என்று நாங்கள் கருதுகின்றோம்.”

போராட்டம் நடத்திய மக்கள் ஆளில்லா விமான கமராக்கள் (ட்ரோன்) மூலம் கண்காணிக்க பட்டதாக போராட்டத்தில் பங்கேற்ற வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தலைவர் தியாகராஜா நிரோஷ் குற்றம் சாட்டியிருந்தார்.

“இலங்கையில் இருக்கும் நடைமுறைகளுக்கு மேலதிகமாக ட்ரோன் கமராக்கள் ஊடாக போராட்டக்காரர்கள் கண்காணிக்கப்பட்டனர். போராட்டத்திற்கு வந்த ஒவ்வொரு பிரஜையின் தகவல்களும் பதிவு செய்யப்பட்டன.”

திஸ்ஸ ரஜமகா விஹாரை கட்டப்பட்டுள்ள தமது காணியை விடுவிக்கக் கோரி 2023ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தில் திஸ்ஸ ரஜமகா விகாரை அருகே போராட்டம் நடத்தி வரும் தமிழர்கள், விகாரை அமைப் பதற்கு 16 தமிழ் குடும்பங்களுக்கு சொந்தமான சுமார் 8.5 ஏக்கர் காணியை இராணுவம் வலுக்கட்டாயமாக கையகப் படுத்தியுள்ளதாக குற்றம் சாட்டுகின்றனர்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமையல் உபகரணங்களை மூன்றாம் கட்டமாகவும் வழங்கிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி




வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவும் நோக்கில் சமையல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு 3ஆம் கட்டமாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் அர்ஷாத் நிஷாம்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கேஸ் அடுப்பு மற்றும் சமையலறை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பெற்றன.

நிகழ்வில் மேலும் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ரியாஸ் கபூர், கொட்டிகாவத்தை பிரதேச சபை உறுப்பினர் சனீக், மற்றும் இம்ரான் நெய்னார் ஆகியோர் கலந்து கொண்டு உபகரணங்களை வழங்கி வைத்தனர்.







# யாழ்ப்பாணம் மீசாலையில் புகையிரத விபத்து நிகழாமல் தடுத்த பாராட்டுக்களுக்குரிய முச்சக்கர வண்டிச் சாரதிகள்!



8ம் திகதி வியாழக்கிழமை அன்று காலை மீசாலை சந்தி புகையிரதக் கடவையில் ஏற்படவிருந்த விபத்து ஒன்று முச்சக்கர வண்டி சாரதிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இன்று குறித்த பகுதியில் ரயில் வந்துகொண்டிருக்கும்போது கூலர் வாகனமொன்று புகையிரத கடவையை கடக்க முற்பட்டுள்ளது. இதனை அவதானித்த மீசாலை தரிப்பிடத்தில் நின்ற முச்சக்கர வண்டிச் சாரதிகள் உடனடியாக செயற்பட்டு கூலர் வாகனத்தை மறித்தனர். இதன்போது புகையிரதமும் அந்நேரத்தில் பயணித்துள்ளது.

இதனால் அங்கு ஏற்படவிருந்த விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

குறித்த கடவை கடந்த 7 நாட்களாக இயங்காத நிலையில் உள்ளது. இது தொடர்பாக புகையிரத திணைக்களத்திற்கு அறிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என குற்றம்சாட்டப்படுகிறது.

கடந்த காலங்களில் தொடர்ச்சியாக புகையிரத விபத்துகள் ஏற்பட்டு பல உயிர்கள் பறிபோன சம்பவங்கள் இடம்பெற்றும் புகையிரத திணைக்களம் இது குறித்து நடவடிக்கை எடுக்காமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# கல்முனை மற்றும் நுவரெலியா பிரதேசத்தில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பெண் பொலிஸ் சார்ஜன்ட் உட்பட இருவர் இலஞ்சஊழல் ஆணைக்குழுவினரால் கைது

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு வெல்லாவெளியில் கடமையாற்றிவரும் சக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரிடம் 72,000ரூபாய் பணம் மற்றும் கைபேசியை கையூட்டலாக 2021ம் ஆண்டு பெற்றுக் கொண்டதாக கூறப்படும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பெண் சார்ஜன்ட் ஆகியோரை நுவரோலியா மற்றும் கல்முனையில் 5ம் திகதி அன்று திங்கட்கிழமை (05-01-2026) இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சொத்துக் களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினரால் கைது செய்தனர்.

வெல்லாவெளி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் கல்முனை நாற்பட்டி முனை பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், தனது வீட்டிலிருந்தே பணிக்கு வந்து செல்வதற்காக மட்டக்களப்பு பிரிவுக்குப் பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகரின் அனுமதியைப் பெறவேண்டியிருந்தது.

இதற்கமைய கடந்த 2021ம் ஆண்டு களுவாஞ்சிக்குடி உதவி பொலிஸ் அத்தியட்சகரிடம் குறித்த பொலிஸ் கொஸதாப்பரர் அனுகியபோது அவர் இதற்கான பரிந்துரைகளைச் செய்து தருவதாகக் கூறி, அவரிடமிருந்து பல சந்தர்ப்பங்களில் கைபேசி உள்ளிட்ட பொருட்களையும், 72,000 ரூபாய் பணத்தையும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பெண் பொலிஸ் சாஜன்ட் ஆகியோர் இலஞ்சமாக கோரி பெற்றுள்ளனர்.

இதனையடுத்து உதவி பொலிஸ் அத்தியட்சகர் கடந்தவருடம் இடமாற்றம் பெற்று நுவரெலியாவுக்கு சென்றுள்ளதுடன் பெண் பொலிஸ் சாஜன்ட் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்துக்கு இடமாற்றம் பெற்று சென்றுள்ளார்.

இந்த நிலையில் இலஞ்சம் வாங்கியது தொடர்பாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து சம்பவதினமான 5ம் திகதி அன்று திங்கட்கிழமை தற்போது நுவரெலியாவில் கடமையாற்றிவரும் உதவி பொலிஸ் அத்தியட்சகரை காலை 10.50 மணி யளவில் அங்கு வைத்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர் கைது செய்தனர்.

இதேவேளை கல்முனை பொலிஸ் உதவி அத்தியட்சகர் காரியாலயத்தில் கடமையாற்றிவரும் பெண் சார்ஜன்ட் பிற்பகல் 3.00 மணிக்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டார்.

இதில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் இருவரையும் முறையே நுவரெலியா மற்றும் கல்முனை நீதவான் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# கிழக்கில் மழை மற்றும் காற்றினால் மின்சார தடை ஏற்படுவதைச் சமாளிக்க மக்கள் தங்களை தயாராக வைத்திருக்க வேண்டும்

## மட்டடக்களப்பு அரசாங்க அதிபர் ஜே. எஸ் . அருள்ராஜ்- ஆலோசனை



வங்காள விரிகுடாவின் தென்கிழக்காக உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால் கிழக்கு மாகாணத்தில் பல பகுதிகளில் இன்று 8ம் திகதி தொடக்கம் எதிர்வரும் 10ம் திகதிவரை அதிகளவிலான மழையுடன் பலத்த காற்று வீசும் எனவே மின்தடை ஏற்பட கூடிய வாய்ப்பு ஏற்படும் இதனை கருத்திற் கொண்டு மக்கள் தயார்படுத்துமாறு மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சீரற்ற காலநிலை தொடர்பாக அரசாங்க அதிபர் 8ம் திகதி அன்று வியாழக்கிழமை (08-01-2026) அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

வளிமண்டல திணைக்களத்தின் ஏதிர்வு கூறலின் பிரகாரம் வங்காள விரிகுடாவின் தென்கிழக்காக உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால் இன்று 8ம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 10 ம் திகதி வரையான சனிக்கிழமை வரையில் 100 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி 60 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும் என வளிமண்டல திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

எனவே இதன் காரணமாக இடைக்கிடையே மின்சார தடை ஏற்பட வாய்ப்புகள் காணப்படுகிறது எனவே பொதுமக்கள் இதனை கருத்தில் கொண்டு தங்களது தயார்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கையை விரைவாக முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்வதோடு வானிலை அறிக்கை தொடர்பில் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


Thana Insurance Inc

T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar

Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca

E-mail : thana7@gmail.com

Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772

Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."



# திஸ்ஸ விகாரையிலிருந்து தொடங்காத மாற்றம்?

**திஸ்ஸ விகாரை விவகாரம் ஒரு காணிப்பிரச்சினை மட்டுமல்ல. சட்டப்பிரச்சினை மட்டுமல்ல. அது அதைவிட ஆழமான பொருளில் ஓர் அரசியல் பிரச்சினை. அதற்கு அரசியல் தீர்வுதான் வேண்டும். அதை அரசாங்கம் ஒரு கொள்கை முடிவாக எடுக்க வேண்டும்.**

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

வருஷம் பிறந்த மூன்றாம் நாள் யாழ்ப்பாணத்தில் “நோ லிமிட்” திறக்கப்பட்டது. அன்றைக்கு பௌர்ணமி. அன்றைய நாளில் தையிட்டியில் வழமையைவிட அதிக மக்கள் போராட்டத்தில் பங்குபற்றினார்கள். எனினும், நோ லிமிட்டில்தான் அதிக தொகை மக்கள் நின்றார்கள்.

வழமையாக தையிட்டிப் போராட்டத்தை முன்னெடுத்து வருவது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான். ஆனால் கடந்த இரண்டு போராட்டங்களின் போதும் அந்தக் கட்சியின் தலைவர்கள் அரங்கில் நிற்கவில்லை. அவர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருந்தார்கள். எனவே அந்தக் கட்சியின் இரண்டாம் மூன்றாம் நிலைத் தலைவர்கள் தையிட்டியில் காணப்பட்டார்கள். தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் அங்கே காணப்பட்டார்கள். அங்கு வந்திருந்த மக்களுக்கு நிகராக அதிக தொகை போலீசார் குவிக்கப்பட்டிருந்தார்கள். எனினும் போலீசார் போராட்டக்காரர்கள் மீது பலப்பிரயோகத்தை மேற்கொள்ளவில்லை.

கடந்த மூன்றாம் திகதி அப்படி ஒரு போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த பின்னணியில், போராட்டத்தைக் குழப்பும் நோக்கத்தோடு அரசாங்கம் சில சூழ்ச்சிகளைச் செய்ததாக காணி உரிமையாளராகிய ஒரு பெண் குற்றச்சாட்டுகிறார். மூன்றாம் திகதி, அதாவது பௌர்ணமி நாள் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் நோக்கத்தோடு அதற்கும் நான்கு நாட்கள் முன்னதாக, யாழ். அரச அதிபர் காணி உரிமையாளர்களைச் சந்தித்தார். அந்தச் சந்திப்பின்போது விகாரை அமைந்திருக்கும் பகுதியில் உள்ள காணிகளை நான்கு கட்டங்களில் படிப்படியாக விடுவிப்பது என்று ஒரு இணக்கம் காணப்பட்டதாக செய்திகள் வெளிவந்தன. ஆனால் அவ்வாறு நான்கு கட்டங்களாக விடுவிப்பது என்பது காலத்தைக் கடத்தும் ஒரு வேலைதான் என்ற பொருள்பட நயினாதீவில் அமைந்திருக்கும் பௌத்த விகாரையின் விகாராதிபதி ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

தையிட்டியில் கட்டப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை ஒரு விவகாரமாக எழுந்த காலத்தில் இருந்து நயினாதீவு விகாராதிபதி பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சாதகமாகக் கருத்துக்களை தெரிவித்து வருகிறார். அண்மையில் அவர் “டாண் தொலைக்காட்சிக்கு” வழங்கிய பேட்டியில் அரசாங்கத்துக்கு எதிராகவும், தையிட்டி விகாரை கட்டப்பட்டமைக்கு எதிராகவும், எல்லாவற்றையும் விட முக்கியமாக பலம் பாய்ந்த மகா சங்கங்களின் மகாநாயக்கர்களுக்கு எதிராகவும் கருத்துத் தெரிவித்திருந்தார்.

நயினாதீவு விகாரை என்பது தமிழ்ப் பகுதிகளில் உள்ள மிகப் பலமான விகாரைகளில் ஒன்று. தொடர்ச்சியாக அந்த இடத்தில் காணப்படுவது. போர்காலங்களிலும் கடற் படையினரின் பாதுகாப்போடு அந்த விகாரை அங்கேயே இருந்தது. அந்த விகாராதிபதியின் முகநூல் பக்கத்தில் ஏராளம் தமிழ் நண்பர்கள் உண்டு. அவர் தமிழ் கதைப்பார். அவருக்கும் திஸ்ஸ விகாரையின் அதிபதிக்கும் இடையில் ஏதோ முரண்பாடு உள்ளது என்பது ஏற்கனவே தெரிய வந்த ஒன்று. இப்பொழுது அவர் வெளிப்படையாகவே திஸ்ஸ விகாரைக்கு எதிராகவும் அரசாங்கத்தின் முடிவுகளுக்கு எதிராகவும் கதைக்கிறார்.

இவ்வாறு ஒரு விகாராதிபதி அதுவும் வடக்கில் உள்ள முக்கியத்துவம் மிக்க ஒரு விகாரையின் அதிபதி பாதிக்கப்பட்ட மக்களோடு நின்று கதைப்பது என்பது வழமைக்கு மாறானது. ஆனால் அரசாங்கம் அந்த விகாரதிபதியை ஒரு கருவியாகக் கையாண்டு தமிழ் மக்களின் போராட்டங்களை நீர்த்துப்போக வைக்க முயற்சிக்கின்றது என்ற ஒரு விமர்சனமும் உண்டு. கடந்த மூன்றாம் திகதி போராட்டத்தின் பின் அந்த விகாரதிபதி யாழ். அரச அதிபரை சந்தித்தார். அந்த சந்திப்பின்போது காணிகளை படிப்படியாக விடுவிப்பது தொடர்பாக உரையாடப்பட்டதாகத் தெரிகிறது.

“இது காணி உரிமையாளர்களுக்கும் திஸ்ஸ விகாரையின் அதிபதிக்கும் இடையிலான ஒரு பிரச்சினை. இதில் வேறு தரப்பினர் தலையிடுவதை தவிர்க்க வேண்டும்... காணி உரிமையாளர்கள் அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரல்களின் பிரகாரம் செயல்படாது பொறுமை காக்க வேண்டும்” என்று நீதி அமைச்சரும் சட்டத்தரணிமான ஹர்ஷண நாணயக்கார பௌர்ணமிக்கு அடுத்த நாள் தெரிவித்திருந்தார்.

அமைச்சரின் மேற்படி கருத்தானது அரசாங்கம் விவகாரத்தை ஒரு காணி பிரச்சினையாகத் தீர்க்க முற்படுவதைக் காட்டுகிறது. அதனை அரச உயர் அதிகாரிகளுக்கு ஊடாக தீர்க்க முற்படுவதையும் காட்டுகிறது. ஆனால் திஸ்ஸ விகாரை விவகாரம் ஒரு காணிப்பிரச்சினை மட்டுமல்ல. சட்டப்பிரச்சினை மட்டுமல்ல. அது அதைவிட ஆழமான பொருளில் ஓர் அரசியல் பிரச்சினை. அதற்கு அரசியல் தீர்வுதான் வேண்டும். அதை அரசாங்கம் ஒரு கொள்கை முடிவாக எடுக்க வேண்டும்.

திஸ்ஸ விகாரை விவகாரம் என்பது சட்ட நோக்கு நிலையிலும் காணி உரிமையாளர்களின் நோக்கு நிலையிலும் காணி அபகரிப்பாக இருக்கலாம். ஆனால் இங்கே அந்தக் காணியை அபகரித்து வைத்திருப்பது ஒரு விகாராதிபதி அல்ல. அவர் நன்கு நிறுவனமயப்பட்ட ஒரு கூட்டுச் செயற்பாட்டின் ஒரு கருவி மட்டுமே. அந்த விகாரைக்கு அத்திவாரம் போட்டது ராணுவத் தளபதியாக இருந்த சவேந்திர சில்வா. அந்த விகாரையை பகலும் இரவும் தொடர்ச்சியாகக் கட்டியெழுப்பியது படையினர். அந்த விகாரைக்கு பாதுகாப்பு வழங்குவது படையினரும் போலீசாரும். அந்த விகாரையின் அதிபதிக்கு அவர் சார்ந்த பௌத்த மகா சங்கத்தின் வடபகுதிக்கான உயர் பதவியை வழங்கியது அரசாங்கம்.

எனவே இது ஒரு கூட்டுச் செயற்பாடு. கூட்டு ஆக்கிரமிப்பு. அதை அதன் அரசியல் அடர்த்திகூடாக சித்தரித்தால் அது மிகத் தெளிவான ஒரு நிலப் பறிப்பு நடவடிக்கை. மிகத் தெளிவான ஒரு சிங்கள பௌத்த மயமாக்கல் நடவடிக்கை. அதாவது 2009க்கு பின்னரான ஆக்கிரமிப்பின் ஆகப் பிந்திய உதாரணம்.

எனவே அதனை அதற்குரிய அரசியல் பரிமாணத்தோடுதான் அணுக வேண்டும். காணி உரிமையாளர்களை அழைத்து அரசு அதிபர் பேசுவதனாலோ அல்லது அரசு அதிபரும் காணி உரிமையாளர்களும் விகாரதிபதிகளும் பேசுவதனாலோ இந்தப் பிரச்சினை தீர்த்துவிடாது. அதற்கு அரசியல் தீர்வு வேண்டும். இப்போதுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இனப்பிரச்சினை இல்லை என்று கூறுகிறது. தான் இனவாதத்துக்குத் தலைமை தாங்கவில்லை என்று கூறுகிறது. ஆனால் தையிட்டியில் நடப்பது சிங்கள பௌத்த மயமாக்கல்தான். இனவாத நடவடிக்கைதான். அதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் கட்டமைப்புசார் இன அழிப்பு.

இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து கொதி நிலையில் வைத்திருந்தது தமிழ் தேசிய மக்கள் முன்னணிதான். ஒவ்வொரு பௌர்ணமி நாளன்றும் அந்தக் கட்சி தையிட்டியில் போராடும். ஆனால் அந்தப் போராட்டங்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் மட்டும்தான் பங்கு பற்றுவதுண்டு. அவை மக்கள் மயப்பட்ட போராட்டங்களாக அநேகமாக இருப்பதில்லை. எனினும் சில விசேஷ தினங்களில் ஏனைய தமிழ் தேசிய கட்சிகளும், சிவில் சமூகங்களும் இணையும்போது அந்தப் போராட்டத்தில் பெருமளவு சனத் தொகையைக் காண முடிவதுண்டு.




திஸ்ஸ விகாரைக்கு எதிராக கடந்த 30 மாதங்களுக்கு மேலாக போராட்டம் நடக்கின்றது. இப்போராட்டங்களில் சில நாட்களில் அதிக தொகை மக்கள் வருவார்கள். அதற்கு காரணம் அங்கே எல்லா கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் மதகுருக்களும் கூடுவதுதான். கடந்த பௌர்ணமி நாளன்றும் அதுவே நடந்தது. அதற்கு முதலில் கடந்த ஆண்டின் இறுதியில் நடந்த போராட்டத்திலும் அவ்வாறு அதிகளவு ஜனத்தொகையை காண முடிந்தது. அந்தப் போராட்டத்திற்கு அதாவது ஆண்டின் இறுதியில் நடந்த போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தது அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பிரதேச சபை.

பிரதேச சபை, திஸ்ஸ விகாரை சட்டவிரோதமானது என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அன்றைய நாளில் போராடுவதற்கு எல்லாக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தது. அந்த நாளுக்குள்ள முக்கியத்துவம் என்னவென்றால், அன்றைக்குத்தான் அந்த விகாரையின் அதிபதிக்கு கொழும்பில் பதவி உயர்வு வழங்கப்பட்டது. அன்றைய போராட்டத்திலும் கூடியிருந்த மக்களுக்கு நிகராக போலீசார் வந்திருந்தார்கள் யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு பகுதிகளில் இருந்த போலீஸ் பொறுப்பதிகாரிகள் அங்கே தருவிக்கப்பட்டிருந்தார்கள். ஒரு கட்டத்தில் போலீசார் பலப்பிரயோகத்தை மேற்கொண்டு ஐந்து பேர்களைக் கைது செய்தார்கள். அது ஓர் விவகாரமாக மாறியது.

அத்தகைய ஒரு பின்னணியில் அதற்குப் பின்வந்த பௌர்ணமி நாளில் நடக்கவிருந்த போராட்டமும் பிரம்மாண்டமானதாக மாறக்கூடிய ஆபத்துக்களை உணர்ந்த அரசாங்கம் அந்தப் போராட்டத்தை திசைதிருப்பும் நோக்கத்தோடு அரச அதிபருக்கு ஊடாக ஒரு சமரச நகர்வை முன்னெடுத்ததாக காணி உரிமையாளர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். அதே காலப்பகுதியில் திஸ்ஸ விகாரையின் அதிபதியும் காணி உரிமையாளர்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய விதத்தில் சில விடையங்களை தெரிவித்திருந்தார். தவிர நைனாதீவின் விகாராதிபதி பாதிக்கப்பட்ட மக்களின் பக்கம் நின்றார்.

இப்பொழுது நீதி அமைச்சர் கூறுகிறார் அது திஸ்ஸ விகாரையின் அதிபதிக்கும் காணி உரிமையாளர்களுக்கும் இடையிலான ஒரு காணிப் பிரச்சினை என்று. இல்லை.அது காணிப் பிரச்சினை மட்டுமல்ல. அது இன அழிப்பின் ஒரு வடிவம். எனவே அதற்கு அரசியல் தீர்வுதான் உண்டு. காணி உரிமையாளர்கள் மட்டும் அரசாங்கத்தோடு பேச முடியாது. அந்தப் போராட்டத்தை தொடர்ந்தும் கொதிநிலையில் வைத்திருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் உட்பட எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் மதகுருக்களும் அந்த பேச்சுவார்த்தையில் பங்கெடுக்க வேண்டும். ஓர் அரசியல் பிரச்சினையைத் தனியாக காணிப் பிரச்சினையாக அல்லது சட்டப் பிரச்சினையாகச் சுருக்குவது என்பது அந்த பிரச்சினையின் அரசியல் அடர்த்தியைக் குறைக்கும் தந்திரம்தான்.

15 மாதங்களுக்கு முன்பு மாற்றத்தை கொண்டுவருவோம் என வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது, தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் மாற்றத்தைக் காட்ட வேண்டிய ஒரு களம் அது. ஆனால் அனுர அரசாங்கம் திஸ்ஸ விகாரை விடயத்தில் முன்னைய அரசாங்கங்களைப் போலவே அதற்குள்ள இன முரண்பாட்டு, இனப்பிரச்சினைப் பரிமாணத்தை இல்லாமல் செய்து விட்டு அதை வெறும் காணிப் பிரச்சினையாகக் காட்டப் பார்க்கின்றது. புத்த பகவான் மாற்றம் ஒன்றே மாறாதது என்று சொன்னார். ஆனால் இலங்கைத் தீவில் இனப்பிரச்சினை விடயத்தில் மாற்றம் இன்மைதான் மாறாததா?


இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துகள்
பிறக்கும் தை, உங்கள் அனைவருக்கும் நலத்தையும் , வளத்தையும்,
இன்பத்தையும் வழங்க என் இனிய தைத்திருநாள் வாழ்த்துகள்.
LOGAN KANAPATHI - MPP, MARKHAM-THORNHILL
Visit Us: 7380 McCowan Rd, Unit 3, Markham
Tel: 905 – 305 – 1935 | E-mail: logan,kanapathico@pc.ola.org
Logan Kanapathi
LoganKanapathi
Logan_Kanapathi
logankanapathi


Happy Pongal
Wishing you a joyful Pongal filled with gratitude, abundance, and time shared with loved ones.
Warm wishes for Tamil Heritage Month.
Best wishes from Councillor Nick Mantas & the Ward 22 Team
www.nickmantas.ca


Lee Fairclough
Etobicoke—Lakeshore


Stephanie Bowman
Don Valley West


Karen McCrimmon
Kanata—Carleton


John Fraser
Ottawa South


Jonathan Tsao
Don Valley North


Stephen Blais
Orléans


Stephanie Smyth
Toronto—St.Paul's

# HAPPY TAMIL HERITAGE MONTH AND THAI PONGAL

The Ontario Liberal Caucus proudly celebrates the rich history, culture, and contributions of Tamil communities across our province. Wishing everyone a season of prosperity, peace, and joy.

ஒன்டாரியோ லிபரல் சட்டமன்றக்குழு, எங்கள் மாகாணம் முழுவதும் உள்ள தமிழ்ச் சமூகங்களின் வளமான வரலாறு, பண்பாடு, பங்களிப்பு ஆகியவற்றைப் பெருமையுடன் கொண்டாடுகிறது. அனைவரும் செழிப்பும் அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்து வாழ்கவென வாழ்த்துகிறோம்.

**ONTARIO LIBÉRAL CAUCUS**
**INFO@LIBERAL.OLA.ORG**


Lucille Collard
Ottawa—Vanier


Andrea Hazell
Scarborough—Guildwood


Tyler Watt
Nepean


Ted Hsu
Kingston and the Islands


Mary-Margaret McMahon
Beaches—East York


Adil Shamji
Don Valley East


Rob Cerjanec
Ajax




**Salma Zahid**
**Scarborough Centre - Don Valley East**

5-2155 Lawrence Avenue East
Scarborough, ON M1R 5G9
Tel: (416) 752-2358
Email: salma.zahid@parl.gc.ca
SalmaZahid15
@SalmaZahid15



ஆங்கில திட்டத்திற்குரிய
**மழலையர் வகுப்புகளுக்கான பதிவு**
ஜனவரியில் தொடங்குகிறது




**Come Learn With Us!**
www.tdsb.on.ca/kindergarten

# Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**




11/24










உலக செய்திகள்
World News



# இந்தியாவுக்கு 500 சதவீதம் வரி? — மசோதாவுக்கு டிரம்பின் கசப்பான ஒப்புதல்

இந்தியா ரஷ்யாவிலிருந்து அதிக அளவில் கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்த வேண்டும் என்று டிரம்ப் நிர்வாகம் வலியுறுத்தி வருகிறது. ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதன் மூலம் உக்ரைன் போருக்கு மறைமுகமாக நிதியளிப்பதாகவும் டிரம்ப் குற்றம்சாட்டுகிறார். மேலும் ரஷ்ய எண்ணெயை வாங்குவதை நிறுத்தப்போவதாக பிரதமர் நரேந்திர மோடி தன்னிடம் தனிப்பட்ட முறையில் உறுதியளித்ததாக டிரம்ப் மீண்டும் மீண்டும் கூறி வருகிறார். ஆனால், இதுதொடர்பாக எந்தவித உரையாடலும் நடக்கவில்லை என இந்திய வெளியுறவு அமைச்சகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

இந்தியா தொடர்ந்து கச்சா எண்ணெய் வாங்கினால் வரி விதிப்பு அதிகரிக்கப்படும் என்று டிரம்ப் அண்மையில் எச்சரிக்கை விடுத்தார். இந்த நிலையில், ரஷியாவிடம் இருந்து எண்ணெய் வாங்கும் நாடுகளுக்கு 500 சதவீதம் இறக்குமதி வரி விதிக்கும் மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஒப்புதல் அளித்துள்ளார். இதனைத் தொடர்ந்து, அமெரிக்க நாடாளுமன்றத்தில் அடுத்த வாரமே இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டு, வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குடியரசுக் கட்சி செனட்டர் லிண்ட்சே கிரஹாம் எக்ஸ் தளத்தில் இந்த தகவலை பதிவிட்டுள்ளார்.

# நோபல் பரிசு எனக்கு ஒரு பொருட்டல்ல என புலம்புகின்றார் மனநோயாளி டிரம்ப்



அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், தனக்கு நோபல் பரிசு கிடைக்கும் என்ற பெரும் எதிர்பார்ப்பில் இருந்தார். இந்தியா - பாகிஸ்தான் இடையேயான மோதல் உள்ளிட்ட 8 போர்களை நிறுத்தியிருப்பதாகவும், தனக்கு நோபல் பரிசு வழங்க வேண்டும் என்றும் அவ்வப்போது பேட்டிகளில் தனது எதிர்பார்ப்பை வெளிப்படுத்தி வந்தார். ஆனால் அமெரிக்க அதிபர் டிரம்புக்கு நோபல் பரிசு வழங்கப்படவில்லை. இதனால் விரக்தியடைந்த டிரம்ப், தற்போது நோபல் பரிசு எல்லாம் தனக்கு ஒரு பொருட்டல்ல என்று பேசியுள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப், இதுதொடர்பாக கூறியதாவது: “நேட்டோ நாடுகளைக் காப்பாற்றியது நான்தான். என்னுடைய தனிப்பட்ட முயற்சியால் நேட்டோ நாடுகளுக்கான நிதிப் பங்களிப்பு உயர்த்தப்பட்டுள்ளது. நான் தலையிடாவிட்டால் ரஷ்யா உக்ரைனை கைப்பற்றியிருக்கும். நான் தனியாகவே 8 போர்களை முடிவுக்கு கொண்டு வந்தேன். நோபல் பரிசு எனக்கு ஒரு பொருட்டல்ல. நியாயமற்ற முறையில் தனக்கு நோபல் பரிசை நார்வே மறுத்துள்ளது. நார்வே முட்டாள்தனமான முடிவை எடுத்துள்ளது. சீனாவும் ரஷ்யாவும் பயப்படும் ஒரே நாடு அமெரிக்காதான். மோதல்களைத் தடுத்து அமைதியும் முன்னேற்றமும் ஏற்பட காரணமாக இருக்கும் நாடும் அமெரிக்காவே” என்றார்.




# அபுதாபியில் நிகழ்ந்த வாகன விபத்து ஒன்றில் கேரளாவைச் சேர்ந்த 4 குழந்தைகள் உயிரிழந்த சோகம்!



கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டத்தைச் சேர்ந்தவர் அப்துல் லத்தீப். துபாயில் பணியாற்றி வரும் அப்துல், தனது மனைவி ருக்சானா மற்றும் 5 குழந்தைகளுடன் அங்கு வசித்து வருகிறார். இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை வார விடுமுறையை கழிக்க, அப்துல் தனது குடும்பத்தினரோடு அபுதாபி சென்றார். பின்னர் அங்கிருந்து திரும்பும்போது, அவர்கள் பயணம் செய்த கார் பயங்கர விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் அப்துலின் ஆண் குழந்தைகள் அஷாஸ் (14 வயது), அம்மார் (12 வயது), அஸாம் (7 வயது), அயாஷ் (5 வயது) ஆகிய 4 பேரும், அவர்களுடன் பயணித்த வீட்டு பணியாளர் புஷ்ரா (49 வயது) என்ற கேரள பெண்ணும் உயிரிழந்தனர்.

மேலும் அப்துல், அவரது மனைவி ருக்சானா மற்றும் அவர்களது பெண் குழந்தை மூவரும் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · First National Financial LP · TD Canada Trust · Manulife · National Bank · Desjardins · RFA · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாண பல்கலைக்கழக சில உத்தியோகத்தர்களின் அசமந்தப் போக்கினால் அழிக்கப்பட்ட 15 இலட்சம் ரூபா பெறுமதியான காலாவதியாகிய மருந்துகள்!

பு. கஜிந்தன்

யாழ். பல்கலைக்கழக சுகாதார நிலையத்தில் இருந்த 15 இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துகள் காலாவதியாகிய நிலையில் அண்மையில் புதைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்கள் சிகிச்சைக்காக செல்கின்றபோது அவர்களுக்கு மருந்துகள் சரியாக வழங்கப்படாமல் விடுதல், மருந்துகளை வெளியே வாங்குமாறு எழுதி கொடுத்தல் போன்ற செயற்பாடுகளால் இந்த மருந்துகள் இவ்வாறு காலாவதியாகிய நிலையில் புதைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மருந்துகள் காலாவதி திகதியை நெருங்குகின்றது என தெரிந்தவுடன் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தேவையான ஒரு தொகை மருந்துகளை வைத்துக்கொண்டு ஏனைய மருந்துகளை வேறு வைத்தியசாலைகளுக்கு வழங்கியிருந்தால் குறித்த மருந்துகள் இவ்வாறு நிலத்தில் புதைப்பதை தடுத்திருக்க முடியும் என கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

கடந்த காலத்தில் காலாவதியாகிய மருந்துகள் தொடர்பான விடயங்கள் கசக்கி வீசப்பட்ட யரனவை சநிழசவ மூலம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இவ்வாறான பின்னணியில் யாழ். பல்கலைக்கழக சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவச் சேவைகள் தொடர்பாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் சமூகத்தினால் பல்கலைக்கழக உபவேந்தர் உள்ளிட்ட பல தரப்பினருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சுகாதார நிலையங்கள் மற்றும் அவற்றின் சேவைகள் தொடர்பில் மாணவர்களின் தொடர் முறைப்பாடுகளையடுத்து அவை தொடர்பில் தங்களிற்கு இக்கடித்தின் வாயிலாக கொண்டு வருவதோடு, விரைந்த மற்றும் உடனடிக் நடவடிக்கைகளினைக் கோரி நிற்கின்றோம்.

1. பல்கலைக்கழக முதன்னை வளாகத்திலுள்ள சுகாதார நிலையம்.

இராமநாதன் கட்புல மற்றும் நுண்கலைப்பீடம் மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம் ஆகியன முதன்மை வளாகத்திலிருந்து புறம்பாக அமைக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த பீடங்களின் மாணவர்களுக்கென்று தனியான மருத்துவ சேவை வசதிகள் தற்போது வரையில் அமைக்கப்படவில்லை. இட அமைவு காரணமாக இரண்டு பீடங்களின் மாணவர்களும் நோய் நிலைமைகளுடன் பயணம் செய்து மருத்துவச் சேவைகளினைப் பெற்றுக் கொள்வதென்பது இயலாதவொரு காரணமாகும்.

2. சுகாதார நிலையம் கிளிநொச்சி

விவசாய, பொறியியல், தொழில்நுட்ப பீட மாணவர்களுக்கான சுகாதார நிலையம் கிளிநொச்சியில் தனியாகக் காணப்படுகின்றது. குறித்த சுகாதார நிலையத்தில் மருத்துவ சேவைகள் தினமும் மாலை 04.30 மணி மாலை 06.30 மணி வரையில் இடம்பெறுகின்றது.

a. வரையறுக்கப்பட்ட சேவை நேரம் என்பது மாணவர்களிற்கு பெருத்த இடர்பாடுகளினை ஏற்படுத்துகின்றது. முதன்மை வளாகத்தில் முழுநேர வைத்தியர்கள் கடமையில் ஈடுபடுகின்ற நிலையிலேயே கவனிப்பதென்பது நோயாளர்களைக் கடினமாகவுள்ள நிலையில், மூன்று பீடங்களை உள்ளடக்கிய கிளிநொச்சி மருத்துவ இரண்டு நிலையத்தில் மணித்தியாலங்களிற்குள் எவ்வாறு நேர்த்தியாக சேவையினை வழங்க முடியும்?




b. நோயாளர்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, தற்பொழுது இந்த நாட்களில் இந்த மாணவர்கள் என்று நேர அட்டவணை வழங்கப்பட்டு மருத்துவம் இடம்பெறுகின்றது. நோய் அல்லது சுகவீனம் இந்த தினங்களில் தான் தொற்றுவேன் என்று முன்னறிவிப்புச் செய்துவிட்டு வருவது போன்று இந்த நேர அட்டவணை முறைமை முன்னெடுக்கப்படுகின்றது..

c. நோயாளர்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, தற்பொழுது இந்த நாட்களில் இந்த மாணவர்கள் என்று நேர அட்டவணை வழங்கப்பட்டு மருத்துவம் இடம்பெறுகின்றது. நோய் அல்லது சுகவீனம் இந்த தினங்களில் தான் தொற்றுவேன் என்று முன்னறிவிப்புச் செய்துவிட்டு வருவது போன்று இந்த நேர அட்டவணை முறைமை முன்னெடுக்கப்படுகின்றது.

d. தாதியர்கள் காலை 9 மாலை 4 மணி வரையில் கடமையில் ஈடுபடுகின்ற நிலையில், மருத்துவருடைய வருகையும் கடமையும் மாலை 4.30 6.30 மணிக்கு இடையில்த் தான் நிகழ்கின்றது.

மருத்துவர் கடமையில் இல்லாத நேரத்தில் (காலை 9 மாலை 4 மணி) சுகாதார நிலையத்தில் தாதியர்களிற்கு என்ன கடமை எனும் கேள்வி இயல்பில் எழுகின்றது. மேலும் மருத்துவர் பணியில் ஈடுபடும் நேரத்தில் (மாலை 4.30 6.30 மணி) தாதியர்களிற்கு கூடுதல் வேலை நேரம் (Over Time) வழங்கப்படுகின்றது.

e. கிளிநொச்சி வளாகத்தில் பீடங்களினை அமைத்த நாள் முதல் ஊயசனநச உருவாக்கப்படவில்லை. University Medical Officer

f. அத்தியாவசியச் சேவையான மருத்துவ சேவையில், தற்போது வரையில் ஏன் நிதந்தர பணியிடம் உருவாக்கப்படவில்லை.

பல்கலைக்கழகம் நிறுவப்படும் போது உருவாக்கப்படும் போது இருந்த University Medical Officer பணியிடங்களிற்கு மேலதிகமாக உருவாக்கப்படவில்லை. தற்போது பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்துள்ள நிலையில் அத்தியாவசியச் சேவையான மருத்துவச் சேவைப் பணியிடங்கள் மீளாய்வு செய்து உருவாக்கப்படவில்லை என்பது மாணவர்களின் சுகாதார நலனில் நிர்வாகத்தின் அசமந்தப் போக்கினையே வெளிப்படுத்துகின்றது.

மாணவர்களின் நலன்சேவைகள் தொடர்பான பணியிடங்கள், நியமனங்கள் காலதாமதங்களின்றி நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்பது தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. தொடர்ந்தும் மாணவர்கள் தரப்பின் அழுத்தங்கள் வரும் வரையில் காத்திராது, உரிய காலத்தில் மாணவர் நலன்சார்ந்த பணிகளை ஆற்றுமாறு பல்கலைக்கழக நிர்வாகத்தினை வேண்டி நிற்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# In Loving Memory of...



**Felix Arulnayagam Christopher**

Felix Arulnayagam (Aras) Christopher, beloved husband, father, engineer, and community leader, passed away peacefully on January 1, 2026 at the age of 83. He was the son of Arulanandam Christopher and Annama Francispillai Christopher.

Born in Jaffna, Sri Lanka, Felix's life was marked by courage, generosity, and an unbreakable devotion to his family and community. His remarkable journey took him from Sri Lanka to the UK, then to Canada, and finally to New Jersey, USA. He later lived in Rochester, NY and his final years were in Anandale, VA. Along the way, Felix was instrumental in helping many family and friends to relocate from Sri Lanka to Canada and the US.

Felix attended school in Colombo and graduated from St. Benedicts College. He later went to Technical College in Colombo.

A gifted engineer, Felix began his professional career with Bruel and Kjaer, where he spent 10 years refining his expertise in sound and vibration analysis. Inspired by his passion and entrepreneurial spirit, he went on to establish West Caldwell Calibration Labs, a sound and vibration engineering company that grew into two branches with international reach, employing six dedicated professionals. His pursuit of excellence and integrity earned him a stellar reputation in his field and the respect of his peers and clients around the world.

Felix married Ranee Christopher on March 6, 1974. Beyond his professional success, Felix was a devoted husband to his wife, Ranee Christopher, and a loving father to his two children, Dawn and Neil. His dedication and sacrifice for his family remain an enduring testament to the depth of his love.

Felix was also deeply involved in cultural and community life. As an active member and later, president in the 1990s of the NJ Tamil Sangam, he worked tirelessly to preserve and celebrate Tamil heritage while fostering a sense of unity among the New Jersey Tamil diaspora.

In 2010, Felix developed Parkinson's Disease, but this didn't slow him down. He continued to work until age 77. He was a devoted Grandpa who was there for all his grandkids' births. His joy was ever present when he played with Averie, Madison and Aiden.

He continued to travel and enjoy life, even traveling to Bali and Singapore last year.

Felix's life was one of resilience, service, and compassion. He leaves behind a legacy of kindness, hard work, and faith- values that will continue to inspire everyone who knew him.

Felix A Christopher is preceded in death by Arulanandam Christopher, Annama Francispillai, Stanley E Christopher, Julia A Christopher.

Felix A Christopher is survived by Ranee Christopher, Dawn Christopher, Neil Christopher, Lisa Christopher, Alex Christopher, Raji Gunaratnam, Jerry Christopher, Averie Christopher, Madison Christopher, Aiden Christopher.

He will be profoundly missed and lovingly remembered by his wife Ranee, his children Dawn and Neil, daughter in law Lisa and grandchildren Averie, Madison and Aiden, his extended family, and friends.

May his soul rest in eternal peace in heaven. He will be missed forever.

**Visitation:** January 16, 2026 5:00 - 8:00 pm
Jerrett Funeral Homes Scarborough Chapel (660 Kennedy Rd, Toronto, ON M1K 2B2, Canada)

**Funeral Mass:** January 17, 2026 11:00am
St. Maria Goretti Parish (717 Kennedy Rd, Scarborough, ON M1K 3N8, Canada)

Reception to follow Mass at St. Maria Goretti Parish

**Funeral Service in Virginia:** February 14, 2026 11:00am
National Funeral Home/National Memorial Park with Pastor Steve Reynolds
7482 Lee Hwy, Falls Church, VA 22042 United States

**Burial :** National Funeral Home/National Memorial Park
7482 Lee Hwy, Falls Church, VA 22042 United States

**Contacts**
Ranee Christoper (585) 315- 2577
Dawn Christopher (347) 216-3495
Neil Christopher (718) 710-7458

உலக செய்திகள் World News

# சம ஊதியம் வழங்க மனமில்லாமல் போராடவிட்டு, ஊதியத்தையும் பறிக்கிறது திமுக அரசு என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கண்டனம்



போராடும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாது என அறிவித்துள்ளது கண்டனத்திற்குரியது என நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது, “சம வேலைக்கு சம ஊதியம் வழங்கப்படும்” என்று தேர்தல் வாக்குறுதி எண் 311-ல் முழங்கிவிட்டு, நான்கரை ஆண்டுகளாக வழங்காமல் ஏமாற்றி, இடைநிலை ஆசிரியர்களைப் போராடும் நிலைக்குத் தள்ளி, குண்டுக்கட்டாகக் கைது செய்வதோடு, தற்போது போராடும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாது எனத் திமுக அரசு அறிவித்துள்ளது கண்டனத்திற்குரியது. ஏற்கனவே பகுதி நேர ஆசிரியர்களைப் பணி நிரந்தரம் செய்வோம் என்று கொடுத்த வாக்குறுதி எண் 181-ஐ வீசி எறிந்ததோடு, தற்போது இருக்கும் ஊதியத்தையும் பிடித்தம் செய்து, ஆசிரியர்களின் வாழ்வாதாரத்தைப் பறிப்பது அராஜகமானது. பல கோடி செலவழித்து “கல்வியில் சிறந்த தமிழ்நாடு” என்று நாடக விழா நடத்தத் தெரிந்த திமுக அரசுக்கு, சம ஊதியம் வழங்கப் பணமில்லையா? பள்ளிக்கல்வித்துறையின் பொற்காலம் என்று முழங்கும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு, அரசுப்பள்ளி மாணவர்களின் நலன் கருதியும், இடைநிலை ஆசிரியர்களின் குடும்பங்களின் நலன் கருதியும், கொடுத்த வாக்குறுதிப்படி சம ஊதியம் வழங்க மனமில்லையா?

போராடும் ஆசிரியர்களை முடக்கும் சர்வாதிகாரப் போக்கைக் கைவிட்டு, உடனடியாக ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவிமடுத்து, சம ஊதியம் வழங்கி, மாணவர்கள் நலன் காக்க முனைய வேண்டும் எனத் திமுக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "ஜன நாயகன்" படத்திற்கு ஆதரவு தெரிவித்த திரைப்பிரபலங்கள்




நடிகர் விஜய் நடித்த “ஜனநாயகன்” திரைப்படம், பொங்கலை முன்னிட்டு வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், சர்ச்சைக்குரிய காட்சிகள் காரணமாக இதுவரை தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. இதையடுத்து, படம் மறுஆய்வுக் குழுவின் பார்வைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதுதொடர்பான வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், தணிக்கைச் சான்றிதழ் தொடர்பான தீர்ப்பு இன்று (9-ஆம் தேதி) வழங்கப்படும் என தெரிவித்துள்ளது. இதனால், ஜனவரி 9-ஆம் தேதி “ஜனநாயகன்” வெளியாகாது என தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது. இதற்கிடையில், அரசியல் தலைவர்கள் மற்றும் திரைப்பிரபலங்கள் பலரும் படத்திற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

- இயக்குனர் வெங்கட் பிரபு வெளியிட்டுள்ள பதிவில், “எதுவாக இருந்தாலும் பரவாயில்ல.. இந்திய சினிமாவிலேயே மிக மிக பெரிய பேர்வெலாக இது இருக்க போகுது” என்று தெரிவித்துள்ளார்.

- இயக்குனர் ரத்னகுமார் வெளியிட்டுள்ள பதிவில், “கடந்த சில மாதங்களாக பெரிய படங்கள் மீண்டும் மீண்டும் ஒத்திவைக்கப்படுவதைப் பார்ப்பது வேதனையாக இருக்கிறது. தமிழ் திரையுலகம் பெரும் ஆபத்தில் உள்ளது. மன உறுதியுடன் இருங்கள் விஜய் சார் மற்றும் ஜனநாயகன் படக்குழுவினரே. கோவிட் காலங்களில் நீங்கள் தான் தமிழ் சினிமாவை மீட்டெடுத்தீர்கள். கடைசி முறையாகவும் நீங்கள் அதைச் செய்வீர்கள் என்று எங்களுக்குத் தெரியும். படம் எந்தைக்கு வெளியாகிறதோ, அன்றுதான் திருவிழா.” என்று தெரிவித்துள்ளார்.

- இயக்குனர் அஜய் ஞானமுத்து வெளியிட்டுள்ள பதிவில், “இது அதிகாரத்தின் அப்பட்டமான துஷ்பிரயோகம். எந்தவொரு திரைப்படமும் ஒருவரை மட்டும் சார்ந்தது அல்ல, ஒரு படம் திரைக்கு வர நூற்றுக்கணக்கான மக்களின் உழைப்பும் பணமும் சம்பந்தப்பட்டுள்ளது. படக்குழுவினருக்கு எனது முழு ஆதரவு. இது தளபதியின் படம், அவருடைய கடைசிப் படம். அது எப்போது வெளியானாலும், முன்னெப்போதும் இல்லாத வகையில் அதை நாங்கள் கொண்டாடுவோம்!! தலைவன் படம் எப்போது ரிலீஸோ, அப்போது தியேட்டர் பக்கம் செல்கிறேன்!!” என்று தெரிவித்துள்ளார்.

- நடிகை சனம் ஷெட்டி வெளியிட்டுள்ள பதிவில், “அநியாயத்தின் உச்சகட்டம் இது எல்லாம். ஆனால் நீங்க பண்ணுங்க.. நீங்க இப்படி பண்ண.. பண்ண.. அவங்க (விஜய்) உயர்ந்து கொண்டே தான் போவாங்க. நாங்க கை விட்டுவிட மாட்டோம். பொங்கல் அன்று படம் வரவில்லை என்றால் என்ன? படம் வெளியாகும் நாள் தான் நமக்கு பொங்கல். சும்மாவே ஜன நாயகன் வேற லெவல் பிளாக் பஸ்டர் தான். என்னமோ நினைத்து நீங்கள் செய்த வேலையால், இப்போது சினிமா வரலாற்றிலேயே யாருமே எதிர்பார்க்காத, யாருமே செய்யாத சம்பவத்தை நாங்கள் செய்து காட்டுவோம். காத்திருங்கள். காத்திருக்க நாங்கள் ரெடி, அதற்கு அது தகுதியானதும் கூட. நீ வா தல நாங்க இருக்கோம்” என்று தெரிவித்துள்ளார்.

- நடிகர் ரவிமோகன் வெளியிட்டுள்ள பதிவில், “அண்ணா.. ஒரு தம்பியாக, உங்களுக்குத் துணையாக நிற்கும் கோடிக்கணக்கான தம்பிகளில் ஒருவனாக நானும் உங்களுடன் நிற்கிறேன். உங்களுக்கு ஒரு தேதி தேவையில்லை. நீங்கள்தான் தொடக்கம். அந்தத் தேதி எப்போது வந்தாலும், பொங்கல் அப்போதுதான் தொடங்கும். நான் விஜய் அண்ணாவுடன் நிற்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

- இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் வெளியிட்ட பதிவில், “சினிமா இன்று கடினமான காலத்தில் உள்ளது. குறைந்த பட்ஜெட் சுயாதீனப் படங்களுக்கு திரையரங்குகள் இல்லை. பெரிய பட்ஜெட் படங்கள் தணிக்கை, சான்றிதழ் தாமதத்தால் ஒத்திவைப்பு. தணிக்கை காலக்கெடு விதிகள் சீரமைக்கப்பட வேண்டும். பிரிவுகளை விட்டு, சினிமாவைக் காப்பாற்ற அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.” என்று தெரிவித்துள்ளார்.

- நடிகர் சிபி சத்யராஜ் வெளியிட்டுள்ள பதிவில், “ஜனநாயகன் வெளியீட்டை சுற்றி நடக்கும் அனைத்து நிகழ்வுகளும் மிகப்பெரிய வெற்றிக்கான சரியான மேடையை அமைத்து தருகின்றன. நம்பிக்கையோடு இருங்கள். நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம்” என்று தெரிவித்துள்ளார்.


# விஜய்யின் "ஜனநாயகன்" படம் வெளியாகும் நாளே உண்மையான திருவிழா – சிலம்பரசன்



கேவிஎன் புரடக்ஷன்ஸ் தயாரிப்பில் ஹெச். வினோத் இயக்கத்தில் உருவாகியுள்ள ஜன நாயகன் பொங்கலை முன்னிட்டு ஜன. 9ஆம் தேதி உலகெங்கும் வெளியாக இருந்தது.வெளிநாட்டில் மட்டுமே முன்பதிவில் சுமார் ரூ.60 கோடி வரைக்கும் டிக்கெட்டுகள் விற்பனையாகி இருந்த நிலையில், படத்திற்கான சான்றிதழ் அளிக்காததால் படம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் நாளை காலை தீர்ப்பு வெளியாக இருக்கும் நிலையில் இது குறித்து சினிமா பிரபலங்கள் தங்களது கருத்துகளைப் பதிவிட்டு வருகிறார்கள். இயக்குநர் அஜய் ஞானமுத்து, ஜெயம் ரவி, இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ், இயக்குநர் அமீர் ஆகியோர் “ஜனநாயகன்” திரைப்படத்திற்கு ஆதரவாக பதிவிட்டுள்ளார்கள். இந்த நிலையில், நடிகர் சிலம்பரசன் பதிவொன்றை வெளியிட்டுள்ளார். அதில், “அன்புள்ள விஜய் அண்ணா, பின்னடைவுகள் எப்போதும் உங்களைத் தடுத்ததில்லை. இதைவிட பெரும் புயல்களைத் தாண்டி வந்துவிட்டீர்கள். இதுவும் கடந்து போகும். “ஜனநாயகன்” வெளியாகும் அன்றே உண்மையான திருவிழா ஆரம்பமாகும்” எனத் தெரிவித்துள்ளார்.

# "திரௌபதி 2" படத்திலிருந்து புதிய பாடல் வெளியீடு




2016ம் ஆண்டு வெளியான “பழைய வண்ணாரபேட்டை” படத்தை இயக்கி தமிழ் சினிமாவில் இயக்குனராக அறிமுகமானவர் மோகன் ஜி. அதைத் தொடர்ந்து 2020ம் ஆண்டு “திரௌபதி” திரைப்படத்தை இயக்கினார். இப்படம் சர்ச்சைக்கு உரிய படமாக இருந்தாலும், மிகப் பெரிய வரவேற்பை பெற்று வெற்றிப் படமாக அமைந்தது. தற்போது அதன் 2-வது பாகத்தை மோகன் ஜி இயக்கியுள்ளார்.

இந்தப் படத்திலும் ரிச்சர்ட் ரிஷி கதாநாயகனாக நடித்துள்ளார். நாயகியாக ரக்சனா இந்துசூடன் “திரௌபதி தேவி”யாக நடித்துள்ளார். சரித்திர காலப் படமாக உருவாகியுள்ள இப்படம் வரும் 23ந் தேதி வெளியாக உள்ளது. இந்த நிலையில், இப்படத்திலிருந்து புதிய பாடலான “தராசுகி ராம்” என்ற பாடல் வெளியாகி உள்ளது. இந்த பாடலை ஜிப்ரான், கோல்ட் தேவராஜ், குரு ஹரிராஜ் ஆகியோர் இணைந்து பாடியுள்ளனர். பாடல் வரிகளை மோகன் ஜி எழுதியுள்ளார். இந்த பாடல் கவனத்தை ஈர்த்து வருகிறது.




# யுவன் குரலில் வெளியான பராசக்தி படத்தின் "சேனைக் கூட்டம்" பாடல்

சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள படம் பராசக்தி. சிவகார்த்திகேயனின் 25வது படமான இதில் ஜெயம் ரவி, அதர்வா, ஸ்ரீலீலா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்தி திணிப்புக்கு எதிரான மொழிப்போரை அடிப்படையாக கொண்டு எடுக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைத்துள்ளார். இப்படத்தின் முன்னோட்டம் ஜனவரி 5 வெளியானது. இதுவரை இந்த முன்னோட்டம் 53 மில்லியன் பார்வைகளை கடந்து சாதனை படைத்துள்ளது. இந்நிலையில் யுவன் சங்கர் ராஜா குரலில் பராசக்தியின் இடம்பெற்ற சேனைக் கூட்டம் பாடல் வெளியிடப்பட்டுள்ளது.


SARAVANAA BHAVAN®
HSB CANADA
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
Pongal
Special Buffet
BREADS & RICE
• Poori
• Steamed Rice
• Seeragasamba Ghee Rice
PORIYAL & SPECIALS
• Sorakkai Paal Kootu
• Sakkaravalli Kizhangu Perattal
• Kathrikai Thokku
• Peerkangai Chutney
DESSERTS
• Panjamirudham
• Sakkara Pongal
• Poornam Boorelu
SIGNATURE CURRIES & GRAVIES
• Palakaikari Sambar
• Pineapple Rasam
• Thalicha Medhu Pakoda Thayir Kuzhambu
• Maravalli Kizhangu Motchai Kara Kuzhambu
• Parankikai Puli Mandy
• Cauliflower Pattani Kurma
SIDES & ACCOMPANIMENTS
• Paruppu Nei
• Urulai Vellari Thayir Pachadi
• Mangai Thovaiyal
• Mix Veg Oorugai
• Vadaams
• Moru Milagai
14th January 2026
Available at Scarborough
Timings: 10.00 AM - 4.00 PM
SCARBOROUGH 416 293 7755
MISSISSAUGA 905 290 0769
BRAMPTON 905 457 7575
DELTA B.C 778 578 7575

# யாழ்ப்பாண மாவட்டம் இதுவரை எதிர்கொள்ளாத அதிக மழை வீழ்ச்சி பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது என்கிறார் விரிவுரையாளர் பிரதீபராஜா!

தற்போது உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் யாழில் 650 மில்லிமீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் உள்ளதாக யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.




இதன் தாக்கம் காரணமாக யாழ். மாவட்டம் இதுவரை எதிர்கொள்ளாத அளவு பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். யாழ். ஊடக அமையத்தில் 7ம் திகதி புதன்கிழமை அன்று (07.01.2026) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், உருவாகியுள்ள தாழ்வு மண்டலமானது, நாட்டின் கிழக்கு கடற்கரையை நோக்கி நகர உள்ளது. இது மணிக்கு 9 கிலோமீற்றர் வேகத்தில் நகரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் 60 கிலோமீற்றர் வேகத்தில் காற்றும் வீசக்கூடும்.

குறிப்பாக 1970ஆம் ஆண்டுக்கு பின்னர் ஜனவரி மாதத்தில் உருவாகியுள்ள 21ஆவது தாழ்வு மண்டலமாக அமைகின்றது. ஆனாலும் கடந்து சென்ற தாழ்வு மண்டலங்கள் விட இது அதிக தாக்கத்தை ஏற்படுத்தும்.

அதாவது இதன் நகர்வும் பாதை கடல் பகுதியாக இருந்தாலும் வடக்கு நோக்கி நகரும் போது தரையையும் ஊடறுத்துச் செல்லவுள்ளது. அத்துடன் மிக குறைந்தளவு வேகத்தில் நகர்வதால் எதிர்வரும் 8, 9, 10ஆம் திகதிகளில் கிழக்கு மாகாணம் பாரியளவு மழைவீழ்ச்சியை எதிர்கொள்ள வாய்ப்புள்ளது.

அத்துடன் 9, 10 ஆம் திகதிகளில் யாழ். மாவட்டம் மிக அதிக மழைவீழ்ச்சியை எதிர்கொள்ள உள்ளது. இதன் தாக்கம் டிட்வா புயலால் தென்பகுதி எதிர்கொண்ட பேரழிவுகளை விட அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்க முடிகிறது.

துறைசார் அதிகாரிகள் இது தொடர்பில் துரித முன்னேற்பாடுகளை முன்னெடுப்பது சிறந்தது. எனவே பொதுமக்கள் இந்த விழிப்புணர்வு எச்சரிக்கையை அவதானத்தில் கொண்டு தங்களது பாதுகாப்பை உறுதி செய்வது அவசியம் என அறிவுறுத்தியுள்ளார்.




# தமிழ் மரபுத் திங்கள்
## (நிலைமண்டில ஆசிரியப்பா)

---

*மரபுத் திங்களை மகிழ்வுடன் கொண்டாட*
*கரங்கள் கோர்த்தே களத்திலே இணைவோம்*
*தமிழனின் பெருமையைத் தரணியில் இயம்பியே!*
*அமிர்தத் தமிழை அரியணை ஏற்றுவோம்*
*உழவர் திருநாளை உலகறியச் செய்தே!*
*உழவுத் தொழிலுக்கு உன்னதம் சேர்ப்போம்*
*பொங்கல் விழாவைப் பொறுப்பாய்ச் செய்தே!*
*மங்காத் தமிழன் மரபு காப்போம்*
*முத்தாய் எமக்கு மூத்தோர் தந்த*
*முத்தமிழும் மூவேந்தர் கதையும் சிலம்பும்*
*ஆய கலைகள் அறுபத்து நான்கையும்*
*தேய விடாமல் திடமாய்க் காப்போம்*
*திருக்குறள் தேவாரம் திருவெம்பா திருக்கோவை*
*அரும்பெரும் காப்பியம் ஐந்துடன் ஆத்திசூடி*
*பருப்பொடு சதிபோல் பாலகர் விரும்பி*
*கருத்தொடு கற்றிடக் களத்தைக் கொடுப்போம்.*
*பாரம் பரிய பண்பாட்டு விழுமியம்*
*காரம் குறையாக் கண்ணாய்க் காப்போம்*
*கிட்டிபுள் கிளித்தட்டு கும்மி கோலாட்டம்*
*சிட்டான சிறார்க்குச் சிந்தையில் ஏற்றுவோம்*
*சொக்கட்டான் எட்டுப் பெட்டி சிலம்பம்*
*கொக்கான் வெட்டுதல் கெந்திப் பிடித்தல்*
*பொம்ம லாட்டம் போன்ற செயல்களை*
*செம்மை குறையாமல் செவிகளில் சொல்வோம்*
*“பொங்கு தமிழுக்குப் பங்கம் விளைந்தால்*
*சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு”*
*பாரதி தாசனின் பாடல் வரிகளை*
*பாரெலாம் ஒலித்திட பாதை அமைப்போம்*
*சோர்விலா இனமாய்த் துலக்கம் பெற்றிட*
*சாரங்கன் தாள்பணிந்து சபதம் எடுப்போம்*
*அதிசயிக்கும் அறிவியலை அன்றே கொடுத்த*
*அதிரசமாய் நாவில் அசைந்திடும் தமிழே!*
*முச்சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்த*
*பச்சைத் தமிழர் பாரினில் நாங்கள்*
*கதிரோடு ஆடும் கழனி போலவே*
*சதிராடும் எங்கள் எண்ணத்திற் தமிழே!*
*அங்கமாய் எம்முள் ஆகிவிட்ட மொழியை*
*பங்கம் வராமல் பார்த்துக் கொள்வோம்.*
*அக்கரை நாடிருந்து அகதியாய் வந்தாலும்*
*இக்கன டாவிலும் தொலைக்கா இனமேநாம்*
*நன்னெறியை உலகிற்கு நயந்த நற்றமிழே!*
*என்றும் உன்னுடன் இனிமையாய்ப் பயணிப்போம்*
*வாழ்க்கையை வகுத்துக் காட்டிய மொழியை*
*வீழ்ந்து விடாமல் வீச்சுடன் காப்போம்*
*எங்களை உலகிற்கு எடுத்துக் காட்டியது*
*தங்கம் போன்ற தரமான தாய்த்தமிழே.*
*உலகில் மூத்த மொழியாய் உதிர்த்து*
*பலரும் போற்றும் பண்பான மொழியெமதே*
*எங்கள் தாய்மொழி தமிழென இயம்புவோம்*
*சங்கத் தமிழென சந்ததிக்குச் சொல்வோம்*
*முத்தாக நாவில் விளையாடும் முத்தமிழை*
*சொத்தாக எண்ணிச் சரித்திரம் படைப்போம்*
*நித்திரைப் பொழுதுகள் நெருங்கும் போது*
*சித்திரக் கதைகளைச் சிறுவர்க்குச் சொல்வோம்*
*நமக்கென நாடு இல்லாத போதிலும்*
*தமிழைத் தொலைக்காத் தலைமுறை நாங்கள்*
*வீழாது ஒருநாளும் எங்கள் வீரத்தமிழ்*
*வாழ்க தமிழினமே வளர்க தமிழ்மொழியே!*

*(எல்லா மொழியும் கற்றுக்கொள்*
*எம்மொழியில் பற்றுக்கொள்.)*

---

***ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்***
***(416) 844-7453***




# "20 வீத கழிவு"க்கு விலைபோன யாழ்ப்பாணத்தின் தமிழ் தேசிய இனம்

**"திஸ்ஸ விகாரை என்ற பெயரில் தமிழ் மக்களின் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை மீட்பதற்கான உரிமைப் போராட்டத்திற்கான அழைப்பை ஏற்று வீதிக்கு வராத யாழ்ப்பாணத்து மக்கள், அதே நாளில் யாழ்ப்பாண நகரில் நடந்த காத்தான்குடி வர்த்தகர் ஒருவரின் ஆடையகத் திறப்புவிழாவின் "20 வீத கழிவு" விளம்பரத்திற்காக யாழ்ப்பாண நகர வீதிகளில் ஆயிரக்கணக்கில் திரண்டு முட்டி மோதினர் - "யாழ் மண்ணே வணக்கம்" என்ற அந்த ஆடையகத்தின் விளம்பரத்திற்கு பதிலாக "யாழ் மண்ணே உனக்கு இது அவமானம்" என்பதாகவே உள்ளது."**

---------------------------------------------------------------------- **கே.பாலா -**

**த**மிழ் தேசிய அரசியலில் தமிழ் மக்களுக்கான உரிமைகள், தீர்வுகளில் தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் எவ்வாறு இரண்டுபட்டுப்போய் முரண்டு பிடித்து நிற்கின்றனவோ அதேபோன்றே வடக்கு மாகாண தமிழ் தேசிய இனமும் தமக்கான உரிமைகள், தீர்வுகள், காணி உரிமைகள், இன ஒற்றுமை விடயத்தில் இரண்டுபட்டுப்போயிருப்பதை அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஒரே நாளில் நடந்த இரு வேறு சம்பவங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

தற்போது வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தையிட்டிப்பகுதியில் அமைக்கப்பட்டுவரும் "தையிட்டி திஸ்ஸ விகாரை" ஒரு இன, மதப் பிரச்சினையாக உருவெடுத்து வடக்கு மாகாணத்தை மட்டுமன்றி முழுநாட்டையும் கொதிப்படைய வைத்துள்ளதுடன் தீவிர சிங்கள-தமிழ் இன முரண்பாடுகளையும் அதிகரித்து வருகின்றது. இவ்வாறாக சிங்கள-தமிழ் இனங்களிடையில் இன-மத முரண்பாடுகளை தீவிரப்படுத்தியிருக்கும் இந்த திஸ்ஸ விகாரை குறித்து சுருக்கமான ஒரு விளக்கம்.

இலங்கை இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையி லான யுத்தம் தீவிரமடைந்த 1990-ஆம் ஆண்டு காலப் பகுதியில் தையிட்டி பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்கள் அங்கிருந்து வெளியேறினர். இவ்வாறு தையிட்டி பகுதியிலிருந்து மக்கள் வெளியேறிய 90 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அந்த இடத்திற்கு பௌத்த விகாரையொன்று காணப்பட்டுள்ளது. ஆனால் திஸ்ஸ விகாரை என்று அது அப்போது அழைக்கப்படவில்லை. யுத்த காலத்தில் விகாரையை அண்மித்து வாழ்ந்த மக்கள் அங்கிருந்து வெளியேறிய சூழ்நிலையில், அந்த காணிகள் இராணுவ வசமிருந்துள்ளன. இவ்வாறு இராணுவ வசமிருந்த காணிகள் பின்னர் விடுவிக்கப்பட்ட நிலையில், விடுவிக்கப்பட்ட தமிழர்களின் காணிகளை அந்த விகாரையிலுள்ள பௌத்த மதகுருமார்கள் கைப்பற்றி, இராணுவத்தின் உதவியுடன் "திஸ்ஸ விகாரை" என்ற பெயரில் மிகப் பிராமண்டமான விகாரை ஒன்றை அமைத்து தற்போது அதனை மேலும் விஸ்தரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். தற்போதைய வடக்கு மாகாண ஆளுனர் நாகலிங்கம் வேதநாயகன் மாவட்டச் செயலாளராக இருந்தபோது இந்த விகாரைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அதன்பின்னர் அப்போதைய ஆளுநர் றெஜினோல்ட் கூரே 2018-ஆம் ஆண்டில் அந்த விகாரைக்கு இன்னொரு அடிக்கல்லை நாட்டினார். 2022 ஆம் ஆண்டில் முப்படைகளின் தளபதியாகவிருந்த சவேந்திர சில்வாவினால் தாதுகோபத்தின் கலசம் வைக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில்தான் தமது காணிகளை ஆக்கிரமித்து இந்த சட்டவிரோத திஸ்ஸ விகாரை கட்டப்படுவதாகவும் தமது காணிகளை தமக்கு வழங்க வேண்டுமெனவும் வலியுறுத்தி அப்பகுதி தமிழ் மக்கள் மஹிந்த ராஜபக்ச, மைத்திரி-ரணில் நல்லாட்சி, கோத்தபாய ராஜபக்ச, ரணில், தற்போது அநுர குமார ஆட்சியென நீண்ட காலமாக தொடர்ந்து போராடி வருகின்றனர். தையிட்டி திஸ்ஸ விகாரைக்குக் கையகப்படுத்தப்பட்ட காணிகளின் உரிமைக்காரர்கள் கிட்டத்தட்ட எல்லோரிடமும் தொடர்ச்சியான உறுதிகள் இருக்கின்றன. இந்த நீடித்த தொடர்புகள் மற்றும் காணி உறுதிகளின் நம்பத்தகு தன்மை போன்றன நயினாதீவு நாகதீப விகாரையாலும் யாழ்ப்பாணம் நாகவிகாரையாலும் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தாலும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் அலுவலகத்தாலும் நீதி அமைச்சு மற்றும் புத்தசாசன அமைச்சு போன்றவற்றாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் அக்காணி திஸ்ஸ விகாரைக்குரியது என விகாரை காராதிபதி விடாப்பிடியாக நிற்கின்றார். இதனால் தமது காணிகளை மீட்டெடுப்பதற்காக காணி உரிமையாளர்களும் சமூக ஆர்வலர்களும் சில அரசியல் கட்சிகளும் ஒவ்வொரு போயாதினத்திலும் அந்த விகாரை முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமையும் பொலிஸார் அடாவடித்தனமாக அவர்களை கைது செய்வதும் தாக்குவதும் நீதிமன்ற கட்டளைகளைப்பெற்று ஆர்ப்பாட்டத்திற்கு தடைவிதிப்பதும் தொடர்கதையாகவுள்ளது,

இதன் உச்சக்கட்டமாக அண்மையில் திஸ்ஸ விகாரை முன்பாக வழக்கம்போல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சைவ மதத் தலைவரும் மனித உரிமைப் பாதுகாவலருமான வேலன் சுவாமிகள், பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் உள்ளிட்ட பலர் தாக்கப்பட்டு பலவந்தமாக கைது செய்யப்பட்டு பொலிஸ் வாகனங்களில் ஏற்றிச்செல்லப்பட்டனர். பொலிஸாரின் இந்த அராஜக நடவடிக்கையால் தையிட்டி சட்டவிரோத திஸ்ஸ விகாரை விடயம் இன்னும் பூதாகாரமானது. வெளிநாடுகளின் தூதரகங்கள் மூலம் சர்வதேசத்தின் கவனத்தையும் பெற்றது.

இந்நிலையில் திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணிகள் தமிழ் மக்களுக்குரியவை. அந்த திஸ்ஸ விகாரை சட்டவிரோதமானது என நயினாதீவு நாகதீப விகாராதிபதி நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் அடித்துக்கூறுகின்றார். திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியாக நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் செயற்பட்டாலும், திஸ்ஸ விகாரைக்கான கண்காணிப்பு பொறுப்பு மற்றுமொரு பௌத்த பிக்குவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பொறுப்பு வழங்கப்பட்டுள்ள பௌத்த பிக்குவே, இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக யாழ்ப்பாணம் திஸ்ஸ விகாரை மற்றும் நயினா தீவு விகாரையின் விகாராதிபதி நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் கூறுகின்றார்.

"இந்த திஸ்ஸ விகாரை பிக்கு இராணுவத்துடன் இணைந்து விகாரையின் காணியில் இல்லாது, தமிழ் மக்களின் காணிகளில தற்போதுள்ள விகாரையை கட்டியுள்ளார். இது தவறு என நான் முதலில் இருந்தே கூறி வருகின்றேன். விகாரைக்கு 18 ஏக்கர் காணி இருக்கின்றது. இது திஸ்ஸ விகாரைக்கு சொந்தமானது என கூறுகின்றனர். திஸ்ஸ விகாரைக்கு என்று காணி உறுதிப்பத்திரம் இருக்கின்றது. அந்த காணிகள் அந்த மக்கள் இருக்க வேண்டும். நான் தானே அதற்கான அனுமதியை கொடுக்க வேண்டும். தமிழ் மக்களிடம் காணி உறுதிப்பத்திரங்கள் இருக்கின்றன. வெசாக் உற்சவத்திற்கு அரசாங்கத்தினால் விகாரைகளுக்கு பணம் வழங்கப்பட்டது. திஸ்ஸ விகாரைக்கும் பணம் வழங்கப்பட்டது. அந்த பிக்குவுடன் இணைந்து இராணுவம் பணத்தை பெற்று தமிழ் மக்களின் காணிகளில் அந்த நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திஸ்ஸ விகாரைக்கு கிடைத்த பணத்தை கொண்டு, ஏனையோரின் காணிகளில் விகாரையை நிர்மாணித்தது சட்டவிரோதமானது. தமது காணிகளை கோரியே தமிழ் மக்கள் போராட்டங்களை நடத்துகின்றனர்.

தற்போதுள்ள நிர்மாணிக்கப்பட்டுள்ள விகாரையை உடைக்க முடியாது. அவ்வாறு உடைத்தால் வேறு பிரச்சினை வரும். அதனால், எனது காணியை தருகின்றேன் என நான் தமிழ் மக்களிடம் கூறினேன். நான் ஏனைய பௌத்த பிக்குகளுடன் கலந்துரையாடினேன். தற்போதுள்ள பிக்குவிடம் உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை. இதனை ஏனையோர் ஏற்றுக்கொண்டார்கள். ஆனாலும் காணி விடுவிக்கப்படவில்லை. தமிழ் மக்கள் போராட்டங்களை நடத்துகின்றனர். அது நியாயமான போராட்டம். நான் பௌத்தம் என்றாலும், எமது காணிகளில் விகாரையை கட்ட வந்தால் எமது மக்களும் பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள் அல்லவா? அது தெளிவாகவே தமிழ் மக்களின் காணிகள். வேண்டுமென்றே இராணுவத்துடன் இணைந்து இதனை செய்கின்றனர். எங்களையே உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. வீதி தடையை ஏற்படுத்தியே இந்த விகாரை நிர்மாணிக்கப்பட்டது. என அவர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறாக தையிட்டி திஸ்ஸ விகாரை விடயத்தில் நயினா தீவு விகாரையின் விகாராதிபதி நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர், யாழ். நாகவிகாரையின் விகாராதிபதி விமலதர்ம தேரர் ஆகியோர் தமிழ் மக்களுக்கு குரல் கொடுத்துவரும் நிலையில அதற்கு மேலும் பலம் சேர்ப்பதற்காக கடந்த 3 ஆம் திகதி சனிக்கிழமை பௌர்ணமி தினத்தன்று திஸ்ஸ விகாரை முன்பாக பாரியதொரு போராட்டத்திற்கு காணி உரிமையாளர்கள், சிவில் சமூக அமைப்புக்கள், யாழ் பல்கலைக்கழக மாணவர்களினால் அழைப்பு விடுக்கப்பட்டது. அன்றையதினம் பல நூற்றுக் கணங்கனவர்கள் திஸ்ஸ விகாரை முன்பாக திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் களம் இறங்கியதனால் பல்லாயிரக்கணக்கான் மக்கள் ஒன்றுதிரள்வார்கள் என எதிர்பார்த்து திஸ்ஸ விகாரை முன்பாக ஆயிரக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால் தமிழ் தேசிய அரசியலில் தமிழ் மக்களுக்கான உரிமைகள், தீர்வுகளில் தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் எவ்வாறு இரண்டுபட்டுப்போய் முரண்டு பிடித்து நிற்கின்றனவோ அதேபோன்றே வடக்கு மாகாண தமிழ் தேசிய இனமும் தமக்கான உரிமைகள், தீர்வுகள் விடயத்தில் இரண்டுபட்டுப்போயிருப்பதை அன்றைய தினமான சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடந்த திஸ்ஸ விகாரைக்கு எதிரான மக்கள் போராட்டமும் யாழ் நகரில் புதிதாக திறக்கப்பட்ட காத்தான்குடி வர்த்தகருக்கு சொந்தமான கொழும்பு, நீர் கொழும்பு, பாணந்துறை, இரத்மலானை, இரத்தினபுரி, கண்டி, கேகாலை போன்ற நகரங்களில் கிளைகளை வைத்துள்ள "நோலிமிட்" ஆடையகத்தின் யாழ்பாணத்துக்கிளை திறப்பு விழாவும் வெளிச்சம் போட்டுக் காட்டின.

தையிட்டி விகாரை ஆக்கிரமிப்புக்கு எதிரான அன்றைய தின போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டு அது முழுநாட்டினதும் மட்டுமன்றி சர்வதேசத்தினதும் கவனத்தைப்பெற்ற நிலையில். அந்த மக்களின் காணி உரிமை, சிங்கள, பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தில் சில நூற்றுக்கணக்கானவர்கள் மட்டுமே பங்கேற்ற நிலையில் அதே நேரத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த "நோ லிமிட்" ஆடையகத் திறப்பு விழாவுக்கு அறிவிக்கப்பட்ட "20 வீத விலைக் கழிவை" பெறுவதற்காக ஆயிரக்கணக்காக திரண்ட மக்கள் கூட்டம் தமிழ்ச் சமூகத்தின் தற்போதைய அரசியல் வீழ்ச்சியை தமிழ் தேசிய கொள்கையில் இரண்டுபட்டுப் போயுள்ளதை அப்பட்டமாக வெளிக்காட்டியது. தமிழ் மக்களின் நிலம் பறிபோகும் நிலையில் அதனைப் பாதுகாக்கும் உரிமைப் போராட்டத்திற்காக வீதிக்கு வராத மக்கள், ஒரு ஆடையகத் திறப்புவிழாவின் "20 வீத கழிவு" விளம்பரத்திற்காக யாழ்பாணத்து வீதிகளில் திரண்டது "யாழ் மண்ணே வணக்கம்" என்ற அந்த ஆடையகத்தின் விளம்பரத்திற்கு பதிலாக "யாழ் மண்ணே அவமானம்" என்பதாகவே உள்ளது.


Happy Thai Pongal
and
Tamil Heritage Month
தை பொங்கல்
மற்றும் தமிழ்
மரபுத் திங்கள்
வாழ்த்துக்கள்
Hon.
TIM HODGSON
Member of Parliament
Markham-Thornhill
Tim.Hodgson@parl.gc.ca
(905) 479-1269
@TimHodgson.MT
@timhodgson.mt
www.timhodgsonMP.ca


WISHING EVERYONE A
HAPPY TAMIL HERITAGE MONTH
AND A HAPPY THAI PONGAL
இனிய தைப்பொங்கல்
மற்றும் தமிழ் மரபுத் திங்கள்
நல்வாழ்த்துக்கள்
ROB CERJANEC
MEMBER OF PROVINCIAL PARLIAMENT, AJAX
UNIT 502, 230 WESTNEY RD , AJAX, ON, L1S 7J5
RCERJANEC.MPP.CO@LIBERAL.OLA.ORG
905-427-2060
WWW.ROBCERJANEC.CA
@ROB4AJAX
@ROB4AJAX
@ROB4AJAX


Happy
Pongal
இனிய
தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்
அறுவடைத் திருநாளான இந்த இனிய நாளில், செல்வமும், நலமும்,
செழிப்பும் உங்கள் வாழ்வில் நிறைந்து, மகிழ்ச்சி பெருக வாழ்த்துகிறேன்.
On this auspicious harvest festival, I extend my best wishes for good health, prosperity, wealth, and happiness.
RAYMOND CHO
MPP - SCARBOROUGH NORTH
Working For You
Ontario
Unit 111, 4500 Sheppard Ave E, Scarborough, ON M1S 3R6
416-297-5040
raymond.choco@pc.ola.org
தமிழிலும் சேவை
We speak Tamil
raymondcho.ca

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எங்களுடன் தொட்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1553 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 9, 2026

# ரொறன்ரோ மாநகரில் 17ம் ஆண்டு தமிழ் மரபுத் திங்கள் ஆரம்ப விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த மாநகரசபை உறுப்பினர் நீதன் சண்முகராஜா!







ரொறன்ரோ மாநகரில் தமிழ் மரபுத் திங்கள் என்னும் உன்னதமான சிந்தனையை ஏற்படுத்தியவர்களுள் முக்கியமானவர் எனக் கருதப்படும் நீதன் சண்முகராஜா அவர்கள் 17ம் ஆண்டு தமிழ் மரபுத் திங்கள் ஆரம்ப விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

தற்போது ரொறன்ரோ மாநகரசபை உறுப்பினனராகச் சேவையாற்றும் நீதன் சண்முகராஜா அவர்கள் தனது "தமிழ் மரபுத் திங்கள் செயலவை" என்னும் அமைப்பின் சார்பிலும் "தமிழ் குடிசார் நடவடிக்கை நிலையம்" **(CANADIAN CENTRE FOR TAMIL CIVIC ACTION)** என்னும் அமைப்போடு இணைந்து கடந்த 06-01-2026 செவ்வாய்க்கிழமையன்று குயின் பெலஸ் விழா மண்டபத்தில் இந்த ஆரம்ப விழாவை ஏற்பாடு செய்திருந்தார்.

அழைக்கப்பெற்ற பல அரசியல் பிரமுகர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் கலை இலக்கியம் மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகள் சார்ந்த பெருமக்கள் மண்டபத்தை நிரப்பிய வண்ணம் மேற்படி ஆரம்ப விழா தொடக்கம் முதல் இறுதி வரை கலை நிகழ்ச்சிகள் மற்றும் உரைகள் என தமிழ்ப் பண்பாட்டுக் கோலங்கள் அலங்கரித்த இனிய விழாவாக நிறைவு பெற்றது. இந்த ஆரம்ப விழா ஏற்பாடுகளில் ரொறன்ரோ பெரும்பாகத்தில் இயங்கிவரும் பல தமிழர் அமைப்புக்கள் பங்குபற்றி தங்கள் ஆதேரவை வழங்கியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# ராஜபக்ச சகோதரர்களினால் கொல்லப்பட்ட ஆங்கிலப் பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்கவின் 17ஆவது நினைவுதினம் மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பெற்றது!

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த போது. ராஜபக்ச சகோதரர்களின் கரங்களினால் கொல்லப்பட்ட ஆங்கிலப் பத்திரிகையாளர்.

லசந்த விக்கிரமதுங்கவின் 17ஆவது நினைவுதினம் மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் 17ஆவது நினைவுதினம் 8ம் திகதி வியாழக்கிழமையன்று மட்டக்களப்பில் மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் கிழக்கிலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு ஊடக அமைப்பின் தலைவர் வா. கிருஷ்ணகுமார் அவர்களின் தலைமையில், மட்டக்களப்பு ஊடக அமையத்தில் இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.



இதில், உயிரிழந்த ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பெற்று, தீபச்சுடர் ஏற்றப்பெற்றதுடன், மலரஞ்சலி செலுத்தப்பட்டு ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

சிரேஷ்ட ஊடகவியலாளரான லசந்த விக்கிரமதுங்க, சண்டே லீடர் பத்திரிகையின் தலைமை ஆசிரியராக பணியாற்றிய காலத்தில், 2009 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி, இனந்தெரியாத குழுவினரால் படுகொலை செய்யப்பட்டார். குற்றவாளி சமூகத்தில் எந்த நிலையில் இருந்தாலும், அதனைப் பொருட்படுத்தாமல் தனது பத்திரிகையின் மூலம் தைரியமாக உண்மைகளை வெளிப்படுத்திய ஊடகவியலாளராக லசந்த விக்கிரமதுங்க விளங்கினார்.




இவரின் ஊடக சேவையை கௌரவிக்கும் வகையில், ஊடக சுதந்திரத்திற்கான யுனெஸ்கோவின் குயிலமோ கேனோ விருது, நேஷனல் பிரஸ் கிளப் - பிரஸ் ஃப்ரீடம் விருது ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன. மேலும், இவர் கொல்லப்பட்ட பின்னரும் International Press Institute – World Press Freedom Heroes விருது வழங்கப்பட்டு சர்வதேச ரீதியாக கௌரவிக்கப்பட்டார்.

இவரது கொலையுடன் தொடர்புடைய பல சந்தேகநபர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டிருந்த போதிலும், இதுவரை இந்தக் கொலைக்குறித்த நீதி கிடைக்கப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் ஊடகவியலாளர்கள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

தென்னிலங்கையில் ஆட்சியாளர்களினால் கொல்லப்பட்ட இந்த ஊடகத் தியாகிற்கான நினைவேந்தலை தமிழர் பகுதியில் நடத்தியமை தென்னிலங்கை நேச சக்திகளினால் வரவேற்றகப்பெற்றுள்ளது.

# "20 வீத விலைக் கழிவு" க்கு விலைபோன யாழ்ப்பாணத்தின் தமிழ் தேசிய இனம்!




"திஸ்ஸ விகாரை என்ற பெயரில் தமிழ் மக்களின் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை மீட்பதற்கான உரிமைப் போராட்டத்திற்கான அழைப்பை ஏற்று வீதிக்கு வராத யாழ்ப்பாணத்து மக்கள், அதே நாளில் யாழ்ப்பாண நகரில் நடந்த காத்தான்குடி வர்த்தகர் ஒருவரின் ஆடையகத் திறப்புவிழாவின் ""20 வீத கழிவு"" விளம்பரத்திற்காக யாழ்ப்பாண நகர வீதிகளில் ஆயிரக்கணக்கில் திரண்டு முட்டி மோதினர்""-- ""யாழ் மண்ணே வணக்கம்""என்ற அந்த ஆடையகத்தின் விளம்பரத்திற்கு பதிலாக ""யாழ் மண்ணே உனக்கு இது அவமானம்"" என்பதாகவே உள்ளது.-கே.பாலா

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H. Selvanayagam Broker